
தமிழரசு
1. 3. '76
மலர்: 6 இதழ்: 17
சென்னை நகரின் தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தீர்த்திடுவோம்!
"ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள், ஒவ்வொருவரும் 5,000 மில்லியன் கனஅடி தண்ணீர்—அதாவது மொத்தத்தில் 1,500 கோடி கனஅடி தண்ணீர்—தருவதாக வாக்குறுதி அளித்துள்ளனர். இத்தண்ணீர் கிடைத்ததும், சென்னை நகரின் தண்ணீர்த் தட்டுப்பாடு தீர்ந்துவிடும்!"
—இந்திரா காந்தி
[சென்னை மெரினா கடற்கரையில் 15-2-1976 அன்று மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதி]
LIC



# நமது இலட்சியம் - ஏழை எளியோர் நல் வாழ்வே!

சுதந்திரப் போராட்டத்தில் தமிழ்நாடு பெருமைக்குரிய இடம் பெற்றிருந்தது. சுதந்திரமடைந்த பிறகும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பலர் திட்டமிடுதல், கொள்கை வகுத்தல், அவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தல் ஆகியவற்றில் முன்னோடியாக விளங்கினர். தமிழ்நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள், தொழிலதிபர்கள் ஒருபுறமும், திறமையும் அனுபவமும் மிகுந்த தொழிலாளர்கள் மறுபுறமுமாக நாடெங்கும் பரவி, பல்வேறு துறைகளிலும் தங்கள் தனித் திறமையை நிரூபித்துள்ளனர். மூலப் பொருள்கள், உலோகங்கள், கனிமங்கள் ஆகியவற்றில் பற்றாக்குறை இருந்த போதிலும், முன்பிருந்த புகழ்பெற்ற அமைச்சரவைகளின் பரந்த கொள்கை— திறமை மிகுந்த நிருவாக அமைப்பு—தொழில் முனைவோரின் ஆர்வம் மிக்க திறமையும், சுதந்திர இந்தியாவில் வளமாக வாழ வேண்டும் என்ற மக்களின் ஆர்வமும் அளித்த பின்பலம்—ஆகியவற்றின் காரணமாக தமிழ்நாடு மிகுந்த முன்னேற்றம் அடைந்திருந்தது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார வளர்ச்சி வியப்பிற்குரியதாகவும், அனைத்து இந்திய அளவில் பெருமைக்குரியதாகவும் விளங்கியது.

ஆயினும் நாட்டின் தொழில் வளர்ச்சியில் கடந்த ஆறு ஆண்டுகளாகத் தனக்கிருந்த சிறப்பு மிக்க இடத்தினைப் பறிகொடுத்து விட்டது தமிழகம் ; செல்ல வேண்டிய பாதையை விட்டும் அது வழுவிச் சென்றது; தேசீயச் சித்தாந்தங்கள், செந்நெறிகள், சீரிய இயல்புகள் ஆகியவற்றை விட்டும் அது விலகிப் போயிற்று; அதனால் பின்தங்கும் பிணியினால் பீடிக்கப்படவும் நேர்ந்தது. நம் மாநிலத்தில் தனிநபர் திட்ட முதலீடு மிகவும் அடிமட்டமான ஒரு நிலைக்குத் தலைக்குப்புறக் கவிழ்ந்தது. பொது வாழ்க்கையில் கண்ணியமும், திறமையும், இலஞ்சத்திற்கும் ஒழுங்கீனங்களுக்கும் வெஞ்சாமரம் வீசும் நிலை ஏற்பட்டது. ஜனநாயக வாழ்வின் கோட்பாடுகளைத் தவர விட்டு விட்டோம். தமிழ் நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அதிகார வர்க்கத்தினரிடையே ஆக்டன் பிரபு ( Lord Acton ) கூறிய வாக்கே பிரதிபலித்தது! ''செயல்முறைகளே நாம் செல்கின்ற இலக்கைத் தீர்மானிக்க வேண்டும்''! என்னும் காந்தியடிகளின் கனிவுரையே தவறானதாகக் கருதப்பட்டது. நல்ல ஆலோசனைகள் பலவீனத்தின் அடையாளங்களாகத் தள்ளப்பட்டன.

## மகிழ்ச்சி பொங்கிய மீட்சிநாள் !

''தமிழ்நாடு முழுமையுமே பிப்ரவரி முதல் நாளை 'மீட்சி தினமாகக்' கொண்டாடியது; குடியரசுத் தலைவரின் ஆட்சியினை வரவேற்றது. அந்த நாள், நேரிய - நீதியுள்ள - திறமை மிக்க - ஒரு சார்பற்ற - தூய்மையான நிருவாகம் பற்றித் தூதுசொல்ல வந்த நாளாக - உற்சாகம் பொங்கும் நாளாக விழா எடுக்கப்பட்டது.

அண்மையில், மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் என்னுடைய சுற்றுப்பயணத்தின்போது நான் கண்டவையும் கேட்டவையுமே நான் இப்போது கூறியவற்றுக்கு எல்லாம் ஆணித்தரமான சாட்சியங்கள் ஆகும். இதற்கு மேலும் எடுத்துக் காட்டுத் தேவையென்றால், அதனையும் மெரினா கடற்கரையோரத்திலே நமது பிரதமரின் சொற்பொழிவை அசையாமல் அமர்ந்து கேட்ட பரந்த மக்கள் கடலின் வடிவத்திலே நாம் பார்த்தோம் ; தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியினைக் கொள்ளை மகிழ்ச்சியுடன் மக்கள் வரவேற்பதற்கு —இந்தியப் பிரதமர் எங்கே சென்றாலும் அவருக்கு நல்வரவு கூற முண்டியடித்து வந்த மக்கள் வெள்ளமே அழுத்தமான சாட்சியமாக அமைந்ததையும் கண்டோம்.

## ஆளுநர் உரை

## புதுயுகம் படைக்கும் அரிய சாசனம்

''அவசரநிலைப் பிரகடனத்தை அடுத்து, ஒரு வரலாற்று யுகத்தின் திறப்பு விழாவாக பிரதமரின் இருபது அம்சத் திட்டம் வந்தது. அதனை அவருடைய வார்த்தைகளிலேயே நினைவுறுத்துகிறேன்:

''அவற்றில் சில திட்டங்கள் புதியவை; மற்றவை முன்பே செயற்படுத்தப்பட்டு வருபவை; ஆனால், அவை வீரியத்துடனும் உறுதிப்பாட்டுடனும் நிறைவேற்றப்பட வேண்டியவை. மந்திரக்கோல் பரிகாரங்களையோ திகைப்பூட்டும் திடீர் விளைவுகளையோ அருள்கூர்ந்து எதிர்பார்க்காதீர்கள். ஏழ்மையை ஒழித்துக் கட்ட ஒரே ஒரு மந்திரம்தான் இருக்கிறது. கடின உழைப்பு, தெளிவான கண்ணோட்டம் இரும்புபோன்ற நெஞ்சுரம் மிகக் கடுமையான கட்டுப்பாடு—ஆகியவையே அந்த மந்திரம். நம்மில் ஒவ்வொருவரும் நமக்கு மட்டுமின்றி, நாம் இருக்கின்ற இடத்தில் அண்டையில் உள்ள சகோதரக் குடிமக்களுக்கும் அதிகமாக உதவிட வேண்டும் என்கிற உறுதிபூண வேண்டும்''

இ—...



இந்தியப் பிரதமர் அவர்களின் இந்தப் புதிய கோட்பாட்டின் கூறுகளாக உள்ள பல்வேறு அம்சங்களையும் நான் விளக்கிக் காட்ட வேண்டிய தேவையில்லை. ஆனால் இருபது அம்சத் திட்டத்தின் மீது உங்கள் கருத்தினை நீங்கள் பதித்திட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஏனெனில், அது ஒன்றே [illegible]ோடு போராடக் கூடிய வறுமைய[illegible]கும் — வலிமை வாய்ந்த கருவியா[illegible] கிராமப்புற மறுமலர்ச்சியை முன் கூட்டியே முழக்கும் முரசமும் ஆகும். மிக உச்சமான நன்மைகளைப் பெறக் கூடிய வகையில் நிருவாக இயந்திரத்தை முடுக்கி விட்டோமானால்—மனிதர்களிடமும் மற்றப் பொருள்களிடமும் பொதிந்து கிடக்கும் மூல பலத்தைப் பொங்கியெழுமாறு நம்மால் இயன்ற வரைக்கும் செய்தோமானால்—இந்தத் திட்டத்தைப் பயன் கொழிக்கும் வகையில் நிறைவேற்றிவிட முடியும்.

இன்றைக்கு நமது இந்திய நாட்டின் அரிய உரிமைச் சாசனமாகவே இருபது அம்சத் திட்டம் எழுந்து வந்துள்ளது. இதனை உடனடியாகவும், உறுதியான முறையிலும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சார்ந்ததாகும். நமது பிரதமர் அவர்கள் கடந்த பத்தாண்டுக் காலமாகக் கிராமப்புற மறுமலர்ச்சிக்குரிய உள்ளமைப்பினை உருவாக்கி வந்திருக்கிறார்கள். வங்கிகள் நாட்டுடைமை அதன் தொடக்கமாக அமைந்தது. அதுமுதல் மின்சாரம் இந்திய கிராமங்களை எட்டியது; — டிராக்டர்கள் பெரும் அளவுக்குப் பயன்படுத்தப் படுகின்றன; இலட்சக் கணக்கில் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன ; இன்று ஒவ்வொரு இல்லத்திலுமே வானொலிப் பெட்டிகள் காணப்படுகின்றன; இன்னும் எத்தனையோ அன்றாட வாழ்க்கைக்கு உரிய மற்ற நவீனமான சாதனங்கள் எல்லாம் கிராமப் புறப் பகுதிகளில் ஊடுருவிய வண்ணம் உள்ளன; எண்ணில் அடங்காத வேலை வாய்ப்புகளும் உருவாக்கப் பெற்று வருகின்றன.

## விலைவாசி வீழ்ச்சியடைய....

''இத்தகைய வாய்ப்புக்களை நமக்கு நற்பயன் உள்ளவைகளாக ஆக்கிக் கொள்வது நம்மையே சார்ந்திருக்கிறது; மகிழ்ச்சி மிகுந்த எதிர்காலத்திற்கு அடித்தளமாக இருபது அம்சத் திட்டத்தை அமைத்துக் கொள்வதும் நம்முடைய கையிலேயே இருக்கிறது. உணவு உற்பத்தியில், நம்முடைய நல்வாய்ப்பாக மிகுதி[illegible]லை நாம் அடைந்தி[illegible] யான மக[illegible]ருக்கிறோம். ஆயினும், அது[illegible]மான உற்பத்தி, தெளிவான கொள்முதல் கொள்கை, சீரான விநியோகக் கொள்கை ஆகியவற்றைத் திட்டமிடுவதிலும் உற்பத்தியாளருக்கு வருவாயை வளர்க்கக் கூடிய விலைகளையும், வாங்குவோருக்கு நியாயமான விலையையும் உத்தரவாதம் செய்வதிலும் நாம் புத்திக்கூர்மையோடு நடக்க வேண்டும். கையிருப்பில் இப்பொழுது போதுமான உணவு இருப்பை நாம் வைத்திருக்கிறோம். கொள்முதல் முடிந்தவுடன், உணவுப் பங்கீட்டுக் கழகத்திடம் வெளிச் சந்தையில் விற்பனை செய்யத் தக்க அளவுக்கு அதிகமான உணவுப் பொருள்கள் இருக்கும். இதுவே, மெத்தனமான போக்கிற்கு இடம் அளித்துவிடக் கூடாது. பொது விநியோக முறை சீரமைப்புச் செய்யப்பட்டு போதுமான சரக்குகள் விநியோகிக்குமாறு பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். நம்மிடம் உணவுப் பொருள்கள் விற்பனைக்காக மட்டுமின்றி, சர்க்கரை, கோதுமை போன்ற இன்றியமையாத பண்டங்களின் விற்பனைக்காகவும் 9,926 சில்லறை அங்காடிகள் உள்ளன. மாநிலத்தின் எல்லையோரங்களில்

> ''வறுமையை ஒழிப்பதற்கான ஒரே மந்திரம்!
>
> * கடின உழைப்பு
> * நெடிய நோக்கு
> * திட சிந்தனை
> * கட்டுப்பாடு''
>
> —இந்திரா காந்தி

கட்டுக்காவல் யந்திரத்தை இறுக்கமாக முடுக்கி விடுவதும், உணவுப் புலனாய்வுத் துறையின் (Food Cell) கடுமையான கண்காணிப்பும் விலைவாசி ஏறாமல் சீராக வைத்திருக்கத் துணை செய்யும். சில சில்லறைக் கடைக்காரர்கள் விலைவாசிப் பட்டியலை வெளியே எழுதி வைப்பதில்லை; சிலர் பதுக்கல் செய்து செயற்கைப் பஞ்சத்தைத் தோற்றுவிப்பதில் ஈடுபடுகின்றனர். அவர்களைப் பற்றியெல்லாம் நமக்குப் புகார்கள் வந்த வண்ணம் இருக்[illegible] கறுப்புச் [illegible]கின்றன. அத்தகைய [illegible] சந்தைக் காரர்கள் மீது 'மிசா' ( MISA ) சட்டத்தை ஏவிவிடுவதற்கும் அரசாங்கம் தயங்காது என்று முன்பே அவர்களை நான் எச்சரித்திருக்கிறேன். திடீர்ச் சோதனைகள், இடைவிடாத கண்காணிப்பு ஆகியவற்றின் மூலமே சாதாரண மனிதன் அதிகமான விளைச்சலின் பலன்களை அடைவதற்கு நாம் உத்தரவாதம் அளிக்க முடியும். சாதாரண மனிதனே நம்முடைய எஜமானன்; அவனுடைய நலனை அலட்சியப்படுத்துவதற்கு எவரையுமே நாம் அனுமதிக்க முடியாது; அத்தகைய நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்.

## கொத்தடிமையை ஒழிப்போம் !

கொத்தடிமைச் சிக்கலையும் நாம் உடனே எடுத்துக் கொண்டு தீர்வு காண வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள 5,000 பிணைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி எஞ்சிய தமிழகப் பகுதியில் உள்ளவர்களுக்கும் சேர்த்தே இந்தச் சிக்கலுக்கு நாம் தீர்வு காண வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இது குறித்து விரிவான முறையில் புலனாய்வு செய்து, பரிகார நடவடிக்கைகளுக்குரிய பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

## ஒளி வீசும் தொழில் வளர்ச்சி !

''என்னுடைய ஆலோசகர்கள் திரு. பி.கே. தவே, திரு. ஆர்.வி. சுப்பிரமணியன் ஆகிய இருவரும் மத்திய அரசு உயர் அதிகாரிகளு

டனும், திட்டக் குழுவுடனும் கருத்துக்களைப் பரிமாறியபின் உறுதியான நம்பிக்கைகளோடும் உருவான திட்டங்களோடும் வந்திருக்கிறார்கள். பொருளாதாரம் ஒரு புதிய எழுச்சியினை எய்திடும் வகையில், ஐந்தாவது திட்டக் காலத்தில் திட்ட முதலீடு உயர்த்தப்படவிருக்கிறது. 1976—77-க்கான ஆண்டுத் திட்டத்தில் ஒரு குறிப்பிடத் தக்க முன்னேற்றப்போக்கைக் காண்பதற்காக மத்திய அரசு காட்டுகின்ற அக்கறைக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!

''சேலம் இரும்பாலை நிதி ஒதுக்கீட்டின் அளவை உயர்த்துவதற்கும் மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது; இன்னும் சில தொழில் திட்டங்கள் பற்றியும் தீவிரமாக அது சிந்தித்து வருகிறது. 53 கோடி ரூபாய் முதலீட்டில், 'பெல்' ( BHEL ) அமைப்பின் கீழ் திருச்சியில் 'தி சீம்லெஸ் ட்யூப் பிராஜக்ட்' ( THE SEAMLESS TUBE PROJECT ) என்னும் நிறுவனம் தொடங்கப் பெறவிருப்பது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய முதலீடுகளிலும், வளர்ச்சித் திட்டங்களிலும் தனக்குரிய பங்கினைத் தமிழ் நாடு தொடர்ந்து பெற்று வரும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பி நிம்மதியோடு இருக்கலாம்.

## கிராம மறுமலர்ச்சி

''கிராம மறுமலர்ச்சித் திட்டம் புதியதொரு கிளர்ச்சியும், மிகுந்த விறுவிறுப்பும் மேவியதாக—எல்லாரையும் ஈர்க்கத் தக்கதாக-இருந்திட வேண்டும். கடன் தொல்லைகளாலும், கடுமையான வட்டிச்சுமையாலும் கிராமப் புறங்கள் அவதியுறுகின்றன. இந்தக் கிராமப் புறக் கடன் சுமையை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன; அதே சமயம், கடன்வசதிகளுக்கான மாற்று ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும். குறைந்தபட்சக் கூலியை நிர்ணயம் செய்வதற்கு மட்டுமின்றி, அவை சரியாகக் கொடுக்கப்படுகின்றனவா என்று கண்காணிப்பதற்கும் இதுவே தகுந்த நேரம்; கொடும் வறட்சிக் குள்ளாகும் மாவட்டங்கள் உடனடியான தனிக் கவனத்திற்கு உரியனவாகும். கண்கூடான, நிரந்தரமான வருவாய் இனங்களுக்கு வழிவகைகளை உருவாக்காமல், முந்தைய நாட்களில் ஏராளமான தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகளில் நீடித்த முறையில் பலன்தரும் நிலைமையை ஏற்படுத்தவும், நிரந்தரமான வரிசைக்கிரமமான அடிப்படையில் வறட்சிக் கொடுமையைச் சமாளிக்கவும் பொருத்தமான செயல் திட்டங்களையே நாம் வகுத்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கும் குடிநீர் இல்லாமல், ஏறத்தாழ 5,000 கிராமங்கள் இருக்கின்றன. கொடிய வறட்சியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு உடனடியாகவும், ஏனைய ஊர்களுக்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகவும் குடிநீர் கிடைப்பதற்கு உடனே நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். தமிழ்நாட்டின் பெரும்பகுதிகளில் மிகுதியான விளைச்சல் கண்டுள்ள போதிலும், கடுமையான வறட்சி நிலவுகின்ற சில பகுதிகளும் இருக்கின்றன. நம்மால் முடிந்த வழியில் எல்லாம் அங்குள்ள மக்களுக்கு உதவி புரிவதற்கு உருப்படியான முயற்சிகள் அனைத்தையும் நாம் எடுத்துக் கொண்டாக வேண்டும். தொடர்ந்து சில பகுதிகளைப் பற்றிக் கொண்டேயிருக்கிறது வறட்சி; அந்த வறட்சிக் கொடுமையை விரட்டியடிக்கக் கூடிய பாசனத் திட்டங்கள் சில அரைகுறையாக-முழு வடிவம் பெறுமல் அப்படியே நிற்கின்றன. அவற்றுக்கு இப்போது முதலிடம் தரப்பட வேண்டும்.

## சென்னைக்குக் கிருஷ்ணா நீர் !

கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகருக்கு 15 டெக்கா மில்லியன் கன அடி தண்ணீர் தருவதற்கு ஆந்திரம், கருநாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்கள் இசைந்துள்ளதாக நமது பிரதமர் அறிவித்திருக்கிறார். தகுந்த சமயத்தில் வருகின்ற பெருந்தன்மையான நன்கொடையாகும், இது. பெருகிக்கொண்டே இருக்கும் நம்முடைய குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய ஒரு நம்பத்தக்க ஆதாரமாகும் கிருஷ்ணா நீர். அது நம் சென்னை மாநகருக்கு வந்து சேர வழிகண்ட பெருமதிப்பிற்குரிய நம்முடைய பிரதமர் அவர்களுக்கு நம் உளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆந்திரம், மராட்டியம், கருநாடகம் ஆகிய மாநில அரசுகளுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துள்ளேன். பிரதமரின் அந்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்தக் கிருஷ்ணா நீரை நாம் பயன்படுத்திக் கொள்வதற்கான வழிதுறைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு, முன்பே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவிட்டன. விரைவிலேயே இந்தத் திட்டம் பற்றிய, விரிவான கணிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்பாடுகள் தொடங்கவிருக்கின்றன. குடிநீர் — கிராமப் புறச் சுகாதாரம்—மருத்துவம் பின்தங்கிய மக்களுக்கு வீட்டு வசதி — நிலமற்றவர்களுக்கு வீட்டுமனையும் நிலப்பட்டாவும் வழங்குதல் முதலானவற்றுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

''இவையெல்லாம் நாம் சந்திக்க வேண்டிய சிக்கல்களில் சிலவே ஆகும். அவை குறித்து உங்களுடைய கருத்துரைகளை நாங்கள் வரவேற்கிறோம்; அவைகள்மீது அக்கறையோடு நாங்கள் சிந்தனை செலுத்துவோம்.

முதிர்ந்த அனுபவமும் —நிருவாகத்திறனும்—ஆற்றல் மிகுந்த அறிவுக் கூர்மையும் கொண்ட என்னுடைய ஆலோசகர்களும், தலைமைச் செயலாளரும் அருந்தொண்டு ஆற்றுவார்கள் என்பதில் எனக்கு ஐயப்பாடே இல்லை. சாதாரண மனிதனுக்கு நாம் ஒரு வாக்குறுதியை வழங்குவோம். ஏதுவாக இருப்பினும் அதனதன் தகுதியின் அடிப்படையிலேயே அணுகப்படும்; நடுநிலையில் நின்று— திறமையாக—விரைவாக அவனுக்குப் பணியாற்றுவதற்கு ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்படும்; இதுவே அந்த வாக்குறுதி மட்டுமல்லாமல், கிராமப்புற மறுமலர்ச்சியிலும், வறுமையை வெல்வதிலும் ஓர் எடுத்துக் காட்டாக இருபது அம்சத் திட்டத்தை திறமையாக நிறைவேற்றுவதில் தமிழகம் விளங்கும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. பத்துக் கிராமங்கள் இணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு கூறாகச் சோமங்கலம் திட்டத்தைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அது, நாட்டின் ஏனைய பகுதிகள் எல்லாம் பின்பற்றத்தக்க ஒரு கலைக் காட்சியாக ஆக்கப்பட வேண்டியது மட்டுமல்ல; மாநிலம் முழுமைக்குமான கிராமப்புற மறுமலர்ச்சிக்கே அது ஒரு தொடக்க முயற்சியாகவும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். உங்களுடைய திறமையிலும், நேர்மையிலும், ஒத்துழைப்பிலும் எனது நம்பிக்கைகளையெல்லாம் நான் பதிய வைத்திருக்கிறேன். அவை மிகுந்த விருப்புத்தோடு நிறைந்த அளவில் நிறைவேறும் என்பதிலும் எனக்குச் சந்தேகமே இல்லை. இப்போது இந்த மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்''.

---

**[27-2-76 அன்று சென்னை ராஜாஜி அரங்கில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காவல்துறை அலுவலர்கள் மாநாட்டின் துவக்க விழாவில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் ஆற்றிய உரையின் தொகுப்பு.]**

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள்



மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மாநாடு கடந்த 27-2-76, 28-2-76 ஆகிய இரு நாட்களில் சென்னை, ராஜாஜி அரங்கில் நடைபெற்றது. அம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டவைகளைப் பற்றி மேதகு தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் 28-2-76 அன்று மாலை பத்திரிகைச் செய்தியாளர்களிடையே பின் கண்டவாறு அறிவித்தார்.

### அமைதி நிலவுகிறது !

குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சி நடைமுறைக்கு வந்தபின், தமிழ்நாட்டில் உள்ள சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றி ஆய்வு செய்யப்பட்டது. தமிழகத்தில் உள்ள மக்களில் எல்லாத் தரப்பினரும் ஆட்சி மாற்றத்தை வரவேற்று உள்ளனர் என்று தெரிய வருகிறது. தமிழகத்தில் தற்போது நிலைமை அமைதியாகவும், ஒழுங்காகவும் உள்ளது.

### தொழில் தகராறுகள் தீர்ந்தன !

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் போதிய அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கவும், வேலை நிறுத்தத்தைத் தடுக்கவும் உதவும் வகையில் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும். குடியரசுத் தலைவரின் ஆட்சி வருவதற்கு முன் தமிழகத்தில் 25 தொழில் தகராறுகளும் கதவடைப்புகளும் நிலவின. அவைகளில் 23 தொழில் தகராறுகள் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டு விட்டன. மீதி 2 தகராறுகளும் ஒரு சில நாட்களில் தீர்க்கப்பட்டுவிடும்.

### கல்லூரி மாணவர்கள் சங்கத் தேர்தல்

கல்லூரி மாணவர்கள் சங்கங்களுக்கானத் தேர்தல்கள் பற்றி முடிவு செய்ய துணை வேந்தர்கள் அடங்கிய உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதில் விவாதிக்கப்படும். மாணவர்கள் சங்கத் தேர்தல்கள் காரணமாக மாணவர்களிடையே மனக்கசப்பு, அரசியல் பூசல்கள் ஆகியவை ஏற்படாமல் இருப்பதற்குத் தகுந்த விதிமுறை வகுக்கப்படும்.

### அரசுப் பணிகளின் மேற்பார்வை

வருவாய்துறை வாரிய உறுப்பினர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் நடைபெறும் வறட்சி நிவாரணப் பணி உட்பட, எல்லா அரசுப்பணிகளையும் தொடர்ந்து மேற்பார்வையிடுவார்கள்.

### மனுநீதித் திட்டத்தின் தரம் உயர்த்தப்படும் !

மனுநீதித் திட்டம் எனப்படும் பொது மக்கள் தொடர்புத் திட்டம் மேலும் தீவிரப் படுத்தப்படும். குறைகளைத் தீர்ப்பதில், வெறும் எண்ணிக்கையில் மட்டும் கவனம் செலுத்தாமல், குறைகளின் தரத்தைப் பொறுத்தே தீவிர கவனம் செலுத்தப்படும்.

### பொதுமக்களின் குறைதீர்க்கத் தனிப்பிரிவு !

பொது மக்களின் குறைகளைத் தரத்தின் அடிப்படையில் துரிதமாகத் தீர்த்து வைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களில் தனிப்பிரிவு அமைக்கப்படும்.

### குடிநீர்த் திட்டத்திற்கு முதலிடம் !

வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்த வரையில், நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து பயன்தரத்தக்கப் பணிகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும். குடிநீர் கிணறுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படும். கிணறுகளை ஆழப்படுத்துவதற்குப் பதிலாகக் கூடுமான வரை ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

> "புதிய சிந்தனையோ, புதிய செயல்திறனோ இல்லாத அதிகாரிகளுக்கு நமது நிர்வாக அமைப்பில் இடம் கிடையாது. நிர்வாகத்தின் எல்லாக் கட்டங்களிலும் மிகச் சிறப்பான சேவையிருக்க வேண்டும். நன்கு பணியாற்றுவோருக்கு உற்சாகம் அளிக்க வேண்டும்"
>
> —இந்திரா காந்தி

## சமுதாயக் கிணறுகள் !

உண்மையிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்டதும், வழக்கமான மகசூலில் 25 சதமோ அல்லது அதற்குக் குறைவான மகசூலோ கொடுத்ததுமான வயல்களுக்கு மட்டுமே நிலவரி தள்ளுபடி செய்யப்படும். வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மட்டுமே நிலவரி தள்ளுபடி செய்யப்படும். தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளில் 5 அல்லது 6 விவசாயிகளின் வயல்களுக்குப் பயன்படும் வகையில் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படும்.

## கடன் நிவாரணம் !

பாரதப் பிரதமர் அறிவித்த 20 அம்சத் திட்டத்தையொட்டி ஒருங்கிணைந்த கடன் நிவாரணத் திட்டம் வகுக்கப்படும். இதற்கிடையில், கூட்டுறவு நிறுவனங்கள், நகைக் கடனுக ரூபாய் 1,000 வரைதான் பெற முடியும் என்ற உச்சவரம்பு நிர்ணயித்து ஏராளமான பேர்களுக்கு நுகர்வோர் கடன் கிடைக்கச் செய்யும். இதற்காகப் பெருமளவில் கடன் உதவி செய்யும்படி இந்திய ரிசர்வ் வங்கியையும் கேட்டுள்ளோம். கிராமப்புற மக்கள் அனைவரையும் கூட்டுறவின்கீழ் கொண்டுவரும்படியும், கூட்டுறவுக் கடன் அனுமதிப்பதில், இதுவரைக் கடன் கொடுக்கப்படாதவர்களுக்கு முன்னுரிமை அளித்து கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகை அடகு பிடிப்பவர்களைத் தீவிர கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்றும், குறிப்பாக நகை அடகுபிடிப்பவர்கள், அடகு வைத்தவர்கள் நகையை ஏலம் விடுவதையும் அல்லது சட்டத்தை மீறுவதற்காக புதிய பத்திரங்கள் தயாரிப்பதையும் தடுக்க முயற்சிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்று ஆண்டில் 2.5 இலட்சம் பேர்களுக்கு வீட்டு மனை !

அரிசனங்களுக்கு, கிராமங்களுக்கு அருகிலேயே வீட்டுமனைகள் வாங்குவதற்கு அதிக அளவு நிதி ஒதுக்கப்படும். ஏறத்தாழ மூன்று ஆண்டு காலத்திற்குள் வீட்டுமனையில்லாத 2.5 இலட்சம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பு மக்களுக்கும் வீட்டுமனைகள் வழங்கப்படும். இதற்காக 17,000 முதல் 19,000 ஏக்கர் நிலம் தேவைப்படும்.

## கைத்தறிக்கு என தனி ஒதுக்கீடு !

கைத்தறிகளுக்கே, சில குறிப்பிட்ட ரகத் துணிகள் உற்பத்தியை ஒதுக்க வேண்டும் என்றுள்ள தற்போதைய உத்தரவை, கடுமையாகச் செயல்படுத்தப்படும். சேலைகள், வேட்டிகள் ஆகியவற்றின் உற்பத்தி கைத்தறிக்கே ஒதுக்கப்பட்டிருந்தாலும், துண்டுகள், படுக்கை விரிப்புகள் ஆகியவற்றின் உற்பத்தியில் தற்போதுள்ள உத்திரவு முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. இந்தக் குறை விரைவில் நீக்கப்படும்.

## கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக உதவி !

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறி துணிகளில் ஏறத்தாழ பாதி தமிழ்நாட்டிலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுவதால், தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல்களை வினியோகம் செய்வதிலும், அவர்கள் உற்பத்தி செய்த துணிகளை விற்பனை செய்வதிலும் மிகவும் திறமையாகவும், தீவிரமாகவும் உதவி செய்யப்படும். விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த 27 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்கப்பட்டுவிட்டதால், தற்போது தமிழ்நாட்டில் கைத்தறி துணி தேக்கம் இல்லை.

## புதிய கைத்தறித் திட்டங்கள் !

ஏற்றுமதி அடிப்படையான கைத்தறித் துணிகள் உற்பத்தி மற்றும் விற்பனைத் திட்டம் ஒன்றை ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் கரூரில் அமைப்பதற்கு இந்திய அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டம்பற்றி ஒருசில நாளில் முடிவு ஏடுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 1,000 கைத்தறிகள் பயனடையும்.

10,000 கைத்தறிகளையும், ஈரோடைத் துணைநிலையமாகவும் கொண்ட தீவிர மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை ரூபாய் 180 இலட்சம் செலவில் துவக்கிடவும் இந்திய அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டம் பற்றியும் வெகுவிரைவில் முடிவு எடுக்கப்படும்

## அரிசி போக்குவரத்துக் கட்டுப்பாடு நீடிக்கும் !

தற்பொழுது மாவட்டங்களுக்கிடையே உள்ள நெல், அரிசி போக்குரத்துக் கட்டுப்பாட்டை அறவே நீக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது. உபரியிலிருந்து பற்றாக்குறை பகுதிக்கு நெல், மற்றும் அரிசியை அனுப்புவது பற்றி ஆராய்ந்து வருகிறோம். அவ்வாறு அனுமதிப்பதும் அரசாங்கத்தின் மூலம் அல்லது கூட்டுறவுத் துறையின் மூலம் இருக்குமே தவிர, தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாக இருக்காது.

## பாசனத் திட்டங்கள் விரைபடுத்தப்படும் !

நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தப்படும். ஆய்வு முடிந்துள்ள 17 நீர்ப்பாசனத் திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படும்.

## இருபது அம்சத்திட்டம் !

இருபது அம்சத் திட்டத்தை மாவட்டமெங்கும் முழுஅளவில் நிறைவேற்றப்படும். இதற்கென மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, 20 அம்சத்திட்டப்பணிகள் விரைவாக நிறைவேற்றப்படும்.



# தொழில் அமைதியைத் தோற்றுவித்தோம்! தொழிலாளர் துயர் துடைத்தோம்!



தமிழகத்தில் குடியரசுத் தலைவரது ஆட்சி ஏற்பட்டபின் பல்வேறு ஆக்கப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மக்கள் மத்தியிலே அமைதி! உற்சாகம், நம்பிக்கை! அரசு ஊழியர்கள், தொழிலாளர்களிடையே புதிய வேகம்! சுறு சுறுப்பு! எதிலும் விரைந்து செயல்படும் தன்மை! ஆகியவற்றைக் காணமுடிகிறது.

குறிப்பாக தொழில்துறையில் ஏற்பட்டுவந்த வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் முழுவதுமாக நீக்கப்பட்டு வருகின்றன.

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுமுன். தமிழ்நாட்டில், வழக்கமாக சுமார் 20 வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் இருந்துவந்தன. இதனால் சுமார் 15,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

1–2-76 அன்றுள்ள நிலவரப்படி தமிழ்நாடு முழுமைக்கும் 17 தொழிற்கூடங்கள் மூடிய நிலையிலிருந்தன. அதில் 3 தொழிற்கூடங்களில் கதவடைப்பினாலும், எஞ்சிய 14 தொழிற்கூடங்கள் தொழிலாளர் வேலை நிறுத்தங்களினாலும் பாதிக்கப்பட்டிருந்தன. சென்ற ஆண்டு (1975) அக்டோபர், நவம்பர் திங்கள் முதல் மூடப்பட்டுள்ள தொழிற்கூடங்களும் அவற்றிலுண்டு. தகராறுகள் தீர்க்கப்படாமல் வேலை நிறுத்தங்கள் அல்லது கதவடைப்புகள் நீடிக்கப்பட்டு வந்தன.



அவ்வாறு பாதிக்கப்பட்டிருந்த தொழிற்கூடங்களின் விவரம் பின்வருமாறு: எந்தத் திங்களிலிருந்து என்பதும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எவ்வளவு பேர் என்ற விவரங்களும் அடைப்பிற்குள் தரப்பட்டுள்ளன.

(1) சக்தி டெக்ஸ்டைல்ஸ்
(அக்டோபர் '75—800 பேர்)

(2) பெஸ்கோயெல் ஜீ.
கோயம்புத்தூர் (டிச. 75—62)

(3) மெட்ராஸ் ரப்பர் பேக்டரி, சென்னை
(அக்டோபர் '75—1,800 பேர்)

(4) இந்துஸ்தான் எகியூப்மெண்ட் தயாரிப்பாளர்கள்
(அக்டோபர் '75—75 பேர்)

(5) கல்யாணி ப்ராசெஸ், கோவை
(நவம்பர் '75—88 பேர்)

(6) பவானி மில்ஸ், கோவை
(டிசம்பர் '75—65 பேர்)

(7) பயோனியர் ஸ்பின்னிங் மில்ஸ், கமுதக்குடி
(டிசம்பர் '75—132 பேர்)

(8) மைக்ரோ டூல்ஸ் லிமிடெட், செங்கற்பட்டு
(டிசம்பர் '75—140 பேர்)

"நமது நாட்டுக்கும், அதன் முன்னேற்றத்துக்கும் உழைப்பதாக விதி செய்து கொள்வதுதான் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் மிக முக்கியமான அம்சமாயிருக்க வேண்டும்."

—இந்திரா காந்தி

(9) சதர்ன் டெக்ஸ்டைல்ஸ், கோவை
(டிசம்பர் '75—253 பேர்)

(10) புலிக்கார் மில்ஸ், திருச்செங்கோடு
(டிசம்பர் '75—200 பேர்)

(11) இந்தியன் டுபாக்கோ கம்பெனி, சென்னை
(ஜனவரி 76—600 பேர்)

(12) குமரன் மில்ஸ், கோவை
(ஜனவரி '76—473 பேர்)

(13) மதுரா கோட்ஸ், மதுரை
(ஜனவரி '76—8,400 பேர்)

(14) மதுரா கோட்ஸ், தூத்துக்குடி
(ஜனவரி '76—3,000 பேர்)

(15) மதுரா கோட்ஸ், அம்பாசமுத்திரம்
(ஜனவரி '76—6,000 பேர்)

(16) எஸ்.ஆர்.சி. மில்ஸ், திருப்பூர்
(ஜனவரி '76—1100 பேர்)

(17) பாண்டியன் மில்ஸ், மதுரை
(ஜனவரி '76—926 பேர்)

மேற்கண்ட 17 தொழிற்சாலைகளிலும் 24000 தொழிலாளர்களும், அவர்தம் குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருந்தன.

1-2-76-ல் குடியரசுத் தலைவரின் ஆட்சி ஏற்பட்டபின், இத்தகராறுகளைத் தீர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு தனி முயற்சிகள் எடுத்துக்கொண்டது. அதன் விளைவு 17 தொழிற்கூடங்களும் திறக்கப்பட்டுள்ளன. வேலை நிறுத்தங்களும் - கதவடைப்புகளும் திரும்பப் பெறப்பட்டுள்ளன. தொழிலாளர் முகம் மலர்ந்துள்ளது. தொழில் உற்பத்தி பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.


## படித்துப் பாருங்கள்

மத்திய அரசின் மாதமிருமுறை ஏடான **"திட்டம்"**, நாட்டின் முன்னேற்றச் செய்திகளைத் தெளிவான தமிழில் தருகிறது. இப்போது நாட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கும் மாபெரும் சமுதாய மாறுதலை ஆதாரபூர்வமான தகவல்களுடன் விளக்கும் தமிழ் ஏடு "திட்டம்". சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்கும் பயன் தரும் இந்த ஏட்டுக்கான சந்தா விவரம்: ஓர் ஆண்டு—ரூ. 6; இரண்டு ஆண்டு—ரூ. 10; மூன்று ஆண்டு—ரூ. 14. (மாணவருக்கும், ஆசிரியருக்கும், நூல் நிலையங்களுக்கும் 25 சதவிகிதம் தள்ளுபடி). தனிப்பிரதி 30 காசு.

"திட்டம்" ஏட்டில் சிறு கதை, நகைச்சுவை, திரைப்பட மதிப்பீடு போன்ற சுவையான பல புதிய பகுதிகள் இடம் பெறவிருக்கின்றன. 1976 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தனிப் பிரதி விலையும், சந்தா விகிதங்களும் கூடுதலாக்கப்படும். ஆனால் 1976 மார்ச் 31 வரை சந்தா கட்டுபவர்களுக்கு சந்தா முடியும் வரை பழைய விகிதப்படியே இதழ்கள் கிடைத்து வரும். இது ஒரு சலுகை.

"திட்டம்" சந்தாதாரராகச் சேர்ந்து பயனடையுங்கள்.

**முகவரி: ஆசிரியர், "திட்டம்",
266, பைக்ராஃப்ட்ஸ் சாலை,
சென்னை-600 014.**




## மதுரை மாவட்டத்திற்குப் பரிசு!

மதுரை மாவட்டம், 1974-ஆம் ஆண்டில் கொடிநாள் வசூலில் முதலிடம் பெற்றுக் கேடயம் பரிசு பெற்றுள்ளது. 1974-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் ரூபாய் 60,000 வசூல் செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்திருந்ததற்கு மாறாக, ரூபாய் 86,071.90 வசூல் செய்து, தமிழகத்திலேயே கொடிநாள் வசூலில் முன்னோடியாக விளங்கியது. சென்னை ராஜாஜி அரங்கில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் மதுரை மாவட்டத்தின் இம்முயற்சியைப் பாராட்டி, கொடிநாள் வசூலில் முதலிடம் பெற்றதற்கான கேடயத்தை மேதகு தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா, அவர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. யு. எஸ். நடராஜன் ஐ.ஏ.எஸ்., அவர்களிடம் வழங்கினார்.

-சாம்-



# பொருளாதார முன்னேற்றத்திற்குப் புதிய திட்டம்

**நா**ன் இன்று உங்களிடையே அரசு மேற்கொள்ளவிருக்கும் சில பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிப் பேசவிருக்கின்றேன். அவைகளில் சில புதியவை. மற்றவை முன்பே துவக்கப்பட்டவை ; ஆனல் மிகுந்த ஆற்றலோடும், உறுதியோடும் செயல்படுத்தப்பட வேண்டியவை. தயவுசெய்து மந்திர குணப்படுத்தலையும், நாடக முடிவுகளையும் எதிர்பார்க்காதீர்கள்!

**வறுமையை ஒழிக்க ஒரே ஒரு மந்திரம்தான் உள்ளது! அது, தெளிவான நோக்கு, திடமான சிந்தனை, மிகுந்த கட்டுப்பாடு ஆகியவற்றுடன் கூடிய கடின உழைப்புதான்!** நம்மிடத்தில் உள்ள ஒவ்வொருவரும்—நமக்காக மட்டுமல்லாமல், நம் சகோதர மக்களுக்காகவும், அதிகமாக உழைக்க உறுதிகொள்ள வேண்டும். அரசுக்குச் சொந்தமானவைகளை அதிகம் மதிக்க வேண்டும். அவைகளை அழிப்பது நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்வதாகும். எல்லா வகையிலும் சிக்கனத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற கண்டிப்பான விதிமுறை நமக்குத் தேவை. எதிலும் படாடோபமாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் கடமை அரசுக்கு உண்டு; ஆனல் குடிமக்களுக்கும் அதிலே பொறுப்பு உண்டு. அதுவே, நாட்டின் வாழ்வைச் செழிக்கச் செய்யும் ஒரே வழியாகும்.

சட்டத்தை மீறும் இயக்கம், தேசிய நற்பணிகள் நடைபெற முடியாமல் முடக்கு

தல், நம்முடைய பாதுகாப்புப் படைகளை ஒழுங்கீனமாகவும், கீழ்ப்படியாமல் நடந்து கொள்ளவும் தூண்டுதல் ஆகியவை பொருளாதாரக் குழப்பத்திற்கும், சீர்குலைவுக்கும் வழிவகுத்ததுடன், பிரிந்து போகும் எண்ணத்திற்கும், வெளிநாட்டு ஆபத்திற்கும் எளிதில் இலக்காகும் தன்மையை நமது நாட்டிற்கு ஏற்படுத்தியுள்ளன. வெறுப்புணர்ச்சி என்னும் புகை ஓரளவுக்கு விலக்கப்பட்டதால், நம்முடையப் பொருளாதார இலக்கினை மிகத் தெளிவாகவும், விரைவாகவும் நோக்க முடிகிறது.

நமது பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளில் முன்னேறுவதற்கான புதிய வாய்ப்பை, நெருக்கடி நிலை நமக்கு அளித்துள்ளது.

## விலைவாசியைக் குறைப்போம்!

முதலாவதாகவும், முக்கியமானதாகவும் உள்ள சவால் விலைவாசியைப் பொறுத்தது ஆகும். கடந்த 5 நாட்களில் பல்வேறு பொருள்களின் விலைவாசி இறங்குமுகமாக உள்ளது. உற்பத்தியை ஊக்குவிக்கவும், கொள்முதலை விரைவுபடுத்தவும், இன்றியமையாப் பொருள்களின் வினியோகத்தை முறைப்படுத்தவும் அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அந்நியச் செலாவணி ஆதாரங்களில் நாம் கொண்டுள்ள கொள்கை மனநிறைவு அளிப்பதாக உள்ளது. எனவே, வினியோகம் போதுமானதாக இருக்கத் தேவையான இடத்தில் இறக்குமதி செய்யப்படும். விலைவாசிப் பட்டியலையும், இருப்பு அட்டவணையையும் அறிவிக்க வேண்டும் என்று வியாபாரிகளுக்கு ஆலோசனை கூறும்படி மாநில அரசுகளை முன்பே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பதுக்கலில் ஈடுபட்டுள்ளோரும், சட்டத்தை மீறுவோரும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

பணவீக்கத்தைத் தடுப்பதற்கான இத்தகைய யுக்திகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். தேர்ந்தெடுத்த அடிப்படையில், கடன் உதவிகளை மிகுந்த கவனத்துடன் முறைப்படுத்த வேண்டும். அரசுத் துறைகளிலும், பொதுத் துறைகளிலும் அனாவசியச் செலவுகளைத் தவிர்க்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

> ''வளர்ந்து வரும் நமது பொருளாதாரத்திற்குத் தேவையான பொருள்களில் பெரும்பாலானவற்றை இந்நாட்டிலேயே தயாரிப்போம். நமது நிபுணர்களையும், நமது பண்டங்களையும் உரிய மதிப்புடன் நடத்துவோம். எங்கும் வியாபிக்கும் சுதேசி உணர்வு இனிமேல் பெருகிக் கொண்டே போக வேண்டும். இதுதான் நாலாவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்.''
>
> —இந்திரா காந்தி

> ''நான் அதிருஷ்டத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. பலன் வேண்டுமானால், கடின உழைப்பு வேண்டும். நெடிய நோக்கு இருந்தால்தான் நெடுந்தூரம் செல்ல முடியும். இலட்சியம் பற்றிக் கனவு காணும் திறமையும், சிந்தனைத் திறமையும் பெரிதாக இல்லாவிட்டால், நம்மால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது.''
>
> —இந்திரா காந்தி

## நிலமற்றவர்களுக்கு நிலமளிப்போம்!

நமது மக்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். நாம், உச்ச வரம்புச் சட்டத்தைச் செயல்படுத்தி, புதிய இரட்டிப்பு ஆர்வத்துடன் உபரி நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க வேண்டும். நில நிலவிவரக் குறிப்பேடுகளைத் தயாரித்து முடிப்பதற்கு ஆங்காங்கேயுள்ள உள்ளூர் மக்களின் உதவியை வேண்டுகின்றோம். பழங்குடி மக்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்படாதிருக்க வேண்டும் என்பதில் தனிக் கவனம் செலுத்தப்படும்.

## வீடற்றவர்களுக்கு வீட்டுமனைகள் அளிப்போம்!

கிராமப்புறங்களில் வீட்டுமனைகள் அளிக்கும் திட்டத்தைப் பெருமளவில் விரிவுபடுத்தப்படும். நிலமற்ற தொழிலாளர்கள் தங்களுடைய பண்ணையார்களுக்குச் சொந்தமான வீட்டுமனைகளில் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு மேல் வாழ்ந்திருப்பார்களேயானால், அவ்வீட்டுமனைகளின் உரிமையை நிலமற்ற தொழிலாளர்களுக்கே அளிப்பதற்கான சட்டம் புகுத்தப்படும். அத்தகைய வீட்டுமனைகளில் இருந்து நிலமற்ற தொழிலாளர்களை வெளியேற்றிட முயன்றால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## அடிமை ஊழியம் அகற்றிடுவோம்!

அடிமை ஊழிய முறை காட்டுமிராண்டித்தனமானது! அது ஒழிக்கப்படும். அத்தகைய அடிமை ஊழியர்களின் பணிகளைப் பயன்படுத்துவதற்குத் தற்பொழுது பாதுகாப்பு அளித்து வரும் எல்லா ஒப்பந்தங்களும் அல்லது இதர ஏற்பாடுகளும் சட்டத்திற்குப் புறம்பானதாக அறிவிக்கப்படும்.

## கிராமப்புற கடன் சுமையை இறக்கிடுவோம்!

கிராமப்புற மக்களின் கடன் சுமையை அறவே அகற்றிடுவதற்குப் படிப்படியான நடவடிக்கைகளை எடுத்திடத் திட்டமிட்டுள்ளோம். நிலமற்ற தொழிலாளர்களுக்கும், கிராமத் தொழிலாளர்களுக்கும், இரண்டு எக்டேருக்

கும் குறைவான நிலம் வைத்துள்ள சிறிய, மிகச் சிறிய உழவர்களுக்கும் நிறுவனக்கடன் உதவி அளிப்பதற்குரிய மாற்று நிறுவனங்கள் தோற்றுவிப்பதற்கான புதிய திட்டங்கள் வகுக்கப்படும். அதே நேரத்தில், மேற்கூறிய தொகுதியினரிடமிருந்து கடனை வசூல் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் வழக்குகளையும், ஜப்திகளையும் நிறுத்தி வைக்கும் சட்டம் கொண்டுவரப்படும். கூட்டுறவுகள், வணிக வங்கிகள், அரசுகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுள்ள கடன்கள் இத்திட்டத்தில் அடங்காது.

## வேளாண்மைத் தொழிலாளர்களில் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்திடுவோம் !

நமது சமுதாயத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களே மிகவும் மோசமாகச் சுரண்டப்படும் பிரிவினர்களாக உள்ளனர். தற்பொழுது செயலில் உள்ள குறைந்த பட்சக் கூலிச் சட்டங்களை மறுஆய்வு செய்யப்படும். எங்கெங்கு அவசியமோ, அங்கெல்லாம் குறைந்தபட்சக் கூலியில் தகுந்த உயர்வு அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## நிலநீர் எடுத்து நீர்வளம் பெருக்குவோம் !

உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் எல்லாரும் முற்பட வேண்டும். வேளாண்மை மற்றும் தொழில் உற்பத்தி உயர்வுக்கு நீரும், மின்சக்தியுமே திறவுகோலாக விளங்குகின்றன. குறைந்தது 50 இலட்சம் எக்டேர் நிலத்திற்குப் புதிதாகப் பாசன வசதி அளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மெய்ப்பிக்கப்பட்டுள்ள நில நீர் ஆதாரங்கள் உடனடியாகப் பயனுக்குக் கொண்டு வரப்படும். பாசனத்திற்காகவும், சிறப்பாக வறட்சிப் பகுதிகளில் குடிநீருக்காகவும் நிலநீர் ஆதாரங்களைக் கண்டறிவதற்கான ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மின்சார உற்பத்தியை உயர்த்திடுவோம் !

மின்சக்தி நிலைமை ஓரளவுக்கு முன்னேறியுள்ளது. மேலும் புதிதாக 2,600 மெகா வாட் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின்சக்தி உற்பத்தி திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் போதிய நிதி அளிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலத் தேவையை முன்னிட்டு, மத்திய அரசுத் திட்டத்தின்கீழ், சிறப்பு அனல் மின்நிலையங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநில மின்வாரியங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

## கைத்தறி நெசவாளர் துயர் துடைப்போம் !

வேலைவாய்ப்பு அளிப்பதில், வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழிலே விளங்குகிறது. நெசவாளர்களுக்குத் தேவையான உள்ளீடு பொருள்கள், நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். கைத்தறிக்குத் தனியாக ஒரு மேம்பாட்டு ஆணையாளர் நியமிக்கப்படுகிறார். நெசவாளர்களுக்கு மிகுந்த பாதுகாப்பு அளிப்பதற்காக, கைத்தறிகளுக்கான ஒதுக்கீடு பற்றிய கொள்கை வகுக்கப்பட்டு வருகிறது.



## தரமான துணிகளை மலிவு விலையில் வழங்கிடுவோம் !

ஆலைத் துறையில், கட்டுப்படுத்தப்பட்ட விலையில் துணி உற்பத்தி செய்யும் திட்டம் முன்னேறி வருகிறது. அதனால், சாதாரண மக்கள் அணியும் வேட்டிகள், புடவைகள், துணிகள் ஆகியவை, சிறந்த தரத்தில் உள்ளன. அவைகள் ஏராளமான விற்பனை நிலையங்கள் வாயிலாகக் கிராமப் புறங்களிலும், நகர்ப் புறங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

## நகர்ப்புற சொத்துக்கு உச்சவரம்பு அமைத்திடுவோம் !

நாட்டின் செலவில், நகர்ப்புற நிலங்களிலிருந்து பலருக்கு அதிர்ஷ்டம் ஏற்பட்டுள்ளது. நகர்ப்புற நில விலையேற்றமும், நகர்ப்புற சொத்துக்களின் அடர்த்தியும் மிகுந்த ஏற்றத் தாழ்வை ஏற்படுத்தியுள்ளதுடன், ஒழுங்கற்ற முறையில் நகர்ப்புற வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குடியிருப்பு அல்லாத காலிமனை, தேவைக்கு மேல் அதிக அளவில் நிலம் வாங்குதல் ஆகியவற்றிற்கு உச்சவரம்பு அமைப்பதற்கும், புதிய குடியிருப்புகளின் அடித்தளப் பரப்பைக் கட்டுப்படுத்துவதற்கும், நகர்ப்புற மற்றும் நகர்ப்புறமாகக் கூடிய பகுதி நிலங்களை சமூக உடைமையாக்குவதற்கும் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.



## வரி ஏய்ப்பவரை வன்மையாகத் தண்டிப்போம் !

வரி ஏய்ப்பு செய்வது குற்றமாகும். இவ்வாறு ஏய்க்கப்பட்ட கறுப்புப் பணத்தில் பெரும்பகுதி ஆடம்பர வீடுகளைக் கட்டுவதற்கே செலவிடப்படுகிறது. நகர்ப்புறச் சொத்து மதிப்பு குறைத்துக் காட்டப்படுகிறது. இத்தகையச் சொத்துக்களை மதிப்பிடுவதற்காகத் தனி சோதனைப் படைகள் அமைக்கப்படும். தண்டனை கடுமையாக இருக்கும். சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் எண்ணி வருகிறோம்.



## கள்ளக் கடத்தல்காரர்களைத் கடுமையாகத் தண்டிப்போம் !

கடத்தல்காரர்களை ஒழிப்பதில் நமது இயக்கம் தீவிரப்படுத்தப்படும். சட்ட நுட்ப அடிப்படையில் அவர்கள் வெளிவந்துள்ளது

நமது முயற்சியை முறியடித்துள்ளது. சில குற்றங்களில் அவர்கள் முன்கூட்டியே ஜாமீன் பெற்றுள்ளனர். கடத்தல்காரர்களின் சொத்து—அவர்களின் சொந்த பெயரில் இருந்தாலும் அல்லது பினாமியாகஇருந்தாலும்—பறிமுதல் செய்யப்படும்.

## தொழில்வளம் பெருக்கத் துணை புரிவோம் !



உரிமம் வழங்கும் முறைகள், புதிய முதலீட்டை தாமதப்படுத்துவதாக அமைந்துள்ளன. இவை எளிதாக்கப்படும். இறக்குமதியோ அல்லது அரசு உதவியோ தேவைப்படாத தொழிற்சாலைகளில் முதலீடு செய்யும் அளவு உயர்த்தப்படும்.

அதே நேரத்தில், உரிமங்கள் தவறான முறைகளில் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். இறக்குமதி—ஏற்றுமதி விதி முறைகள் திருத்தப்பட்டு வருகின்றன. சட்டத்தை மீறினால், விரைவாகப் பரிசோதனை நடத்தி, தண்டிப்பதுடன், உற்பத்திப் பொருள்களைப் பறிமுதல் செய்யப்படும்.

## தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்குபெற துணை நிற்போம் !



தொழிற்சாலைகளில் அதுவும் குறிப்பாக பணிக்கூட மட்டத்திலும், உற்பத்தித் திட்டங்களிலும் தொழிலாளர்களை ஈடுபடுத்தி பங்கு கொள்ள வைக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## போக்குவரத்துக்கு தேசிய அனுமதி அளித்திடுவோம் !

ரயில் மூலம் நடைபெறும் உணவு தானியங்கள், நிலக்கரி, எஃகு, சிமெண்ட் ஆகியவற்றின் போக்குவரத்து கடந்த சில மாதங்களில் முன்னேறியுள்ளது. லாரிகள் மூலமாக பொருள்களை அனுப்புவதில் உள்ள தடைகள் அகற்றப்படும். இதற்காக நாடு முழுவதும் செல்வதற்குரிய அனுமதி வழங்கும் முறை புகுத்தப்படும்.

## நிலையான வருவாய் பெறுவோர்களுக்கு நிம்மதி அளிப்போம் !



நிலையான வருவாய் பெற்று வரும் மக்கள் கடந்த சில ஆண்டுகளில் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளாயினர். அவர்களுக்கு உடனடி நிவாரணம் தேவை. வருமான வரிக்குள்ள குறைந்த பட்ச விதிவிலக்கு அளவு, ரூபாய் 6,000-லிருந்து ரூபாய் 8,000-க்கு உயர்த்தப்படும்.



## மாணவர்கள் குறையைத் தீர்ப்போம் !



ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்து தொலைதூரத்தில் தங்கி உயர் கல்வி கற்க முயன்றால், மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகின்றார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக, எல்லா மாணவர் விடுதிகளுக்கும், அனுமதிக்கப்பட்ட தங்கும் விடுதிகளுக்கும் இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கப்படும்.

## மலிவு விலையில் புத்தகம், எழுதுபொருள் அளிப்போம் !

கல்வித் துறையில் மேற்கொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய நடவடிக்கை, எல்லா பள்ளிக்கூட, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேவையான பாட புத்தகங்களும், எழுதுபொருள்களும் நியாயமான விலையில் கிடைத்திடச் செய்வதாகும். விலைகள் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படும். புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்படும்.

## படித்த இளைஞர்களுக்குப் பாங்கான வேலை அளிப்போம் !

கல்வி கற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கித் தரும் முறைகளில் ஒன்றாக, வேலைப் பழகுநர் சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்தி அமைக்கப்படும். இதன் மூலம் நமது பொருளாதாரத்தில் முறையாக அமைக்கப்பட்ட துறையைச் சார்ந்த நிருவாகத்தினர் குறிப்பிட்ட காலத்திற்கு ஏராளமான வேலைப் பழகுநர்களை அமர்த்திக் கொள்ள முடியும். இவ்வாறு வேலை பழகுவதற்குத் தேர்ந்தெடுப்பதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், பழங்குடியினருக்கும், ஊனமுற்றவர்களுக்கும் உரிய பங்கு கிடைக்கச் செய்வதில் சிறப்பாகக் கவனம் செலுத்தப்படும்.

அடுத்து வரும் வாரங்களில் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்களின் பல்வேறு பகுதிகளைச் சுருக்கமாகத்தான் நான் விவரித்துள்ளேன். இதர விவகாரங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன. மேற்கொண்டு செய்யப்படவிருப்பவை அவ்வப்போது அறிவிக்கப்படும். அவைகள் அனைத்தும் சேர்ந்து நாட்டின் பொருளாதாரத் தோற்றத்தில் ஒரு புதிய பொலிவை ஏற்படுத்தும் என்பதில் எனக்கு ஐயமில்லை. மிக மிக அவசரமானது என்னவென்றால், நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, உதவி செய்ய இயலவில்லை என்ற உணர்வை உதறியெறிய வேண்டும். கடந்த சில மாதங்களில் உருவாகியுள்ள கலவரத்தின் மோசமான அம்சம் வெறுப்புணர்ச்சியைத் தூண்டியுள்ளதும், தேசிய தன்னம்பிக்கையைச் சீர்குலைத்துள்ளதுமேயாகும்.

**நாட்டின் நலத்திற்காக தீரப் பயணம் தொடர வேண்டும் என்ற உணர்வு பெற தற்பொழுது ஒரு புதிய வாய்ப்பு பிறந்துள்ளது. நம் பணியைத் தொடர்ந்து செய்து வெற்றி நடை போடுவோம்!**

*(இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஜூலை 1, 1975 அன்று வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்).*

# பத்தாண்டுகளில் பாரதம் குவித்திட்ட வெற்றி!




நாட்டு மக்களுக்கு முன்னேற்றம் சுபீட்சம் ஆகியவற்றை கொண்டுவந்து அபிவிருத்தி முயற்சிக்கு வழிவகுக்கும் எந்த ஒரு தேசிய வாழ்க்கையிலும் பல முக்கியமான சம்பவங்கள் காரணமாக இருப்பது உண்டு. எல்லா சம்பவங்களேயும் பட்டியல் இட்டுக் கூற முடியாது. ஆகையால் இங்கு சில சம்பவங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் முன்னேற்றப் பாதையில் ஒவ்வொருபடியாக இருக்கக் கூடிய நினைவில் நீங்காத நாட்கள் உள்ளன.

1975-ஆம் ஆண்டோடு முடிவடைந்த 10 ஆண்டுகளில் இச்சம்பவங்கள் யாவும் நிகழ்ந்துள்ளன:

*பிப்ரவரி 5, 1966 :*

சோன் நதிக்கு குறுக்கே ஜவகர் சேது என அழைக்கப்படும் ஆசியாவிலேயே மிக நீளமான பாலத்தைப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி திறந்து வைத்தார்.

*பிப்ரவரி 25, 1966 :*

தாஷ்கண்டு ஒப்பந்த அமலின்படி இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் மற்ற நாட்டு எல்லைப் பகுதியிலிருந்து தங்கள் துருப்புக்களை வாபஸ் பெற்றுக் கொண்டன.

*ஜூன் 5, 1966 :*

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டது. வெளிச்சந்தையில் அதன் மதிப்பு 36.5 சதவிகிதமாகக் குறைந்தது.

*செப்டம்பர் 2, 1966:*

14 காரட்டுக்கும் அதிகமான சுத்தம் கொண்ட தங்க நகைகளைத் தயாரிப்பதில் விதிக்கப்பட்டிருந்த தடைகளை பிரதமர் நீக்கினார்.

*ஜனவரி 23, 1967:*

துர்க்காப்பூரில் இந்தியாவின் முதல் கிராஃபைட் தொழிற்சாலை துவக்கி வைக்கப்பட்டது.

*செப்டம்பர் 30,1967:*

இந்தியாவின் கடல் எல்லைப்பகுதி வரம்பு 6 கடல் மைலிலிருந்து 12 கடல் மைல் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

*நவம்பர் 20, 1967:*

திருவனந்தபுரத்துக்கு அருகேயுள்ள தும்பா ஏவுகணை நிலையத்திலிருந்து இந்தியாவின் முதல் ஏவுகணை 'ரோஹிணி' (ஆர். எச்-75) விண்ணில் ஏவி விடப்பட்டது.





பிப்ரவரி 2, 1968:

விண்வெளி ஆய்வுக்கான சர்வதேச ஒத்துழைப்புக்காக திருவனந்தபுரத்துக்கு அருகேயுள்ள தும்பா ஏவு கணை நிலையத்தை ஐ. நா. சபைக்கு பிரதமர் அர்ப்பணித்துள்ளார்.

பிப்ரவரி 16, 1968:

ராஜஸ்தானில் உதாய்ப்பூருக்கு அருகே நாட்டின் முதல் துத்தநாக உருக்குஆலை இயங்கத் தொடங்கியது.

ஜூன் 8, 1968:

பம்பாய் கடற்படைக்கான துறைமுகத்தில் 'ஐ. என். எஸ். பர்த்கால்' கண்ணி வெடி அகற்றும் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது. இக்கப்பல் இந்தியாவிலேயே கட்டப்பட்ட முதல் கப்பலாகும்.

ஜூலை 5, 1968:

சோவியத் யூனியனிலிருந்து இந்தியாவுக்கான முதல் நீர் மூழ்கிக் கப்பல் வந்து சேர்ந்தது. இதன்மூலம் இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவு ஏற்பட்டது.

அக்டோபர் 23, 1968:

இந்தியாவில் முதல் பிரிகேட் ரக போர்க் கப்பல் 'நீலகிரி' பம்பாய் மஸகாவ்ன் துறைமுகத்தில் பிரதம மந்திரியால் வெள்ளோட்டம் விடப்பட்டது.

நவம்பர் 10, 1968:

ஆசியாவிலேயே மிகப் பெரிய யந்திர மூலம் இயங்கக் கூடிய இரும்புக் கனிஜ சுரங்கமான மத்தியப் பிரதேசத்திலுள்ள பெய்லாடிலா இரும்புக் கனிஜ சுரங்கம் துவக்கி வைக்கப்பட்டது.

ஜூலை 19, 1969:

நாட்டில் மிகப் பெரிய 14 இந்திய பாங்குகளை அரசுடைமையாக்குவதற்கான அமைச்சரவை தீர்மானத்தை பிரதமர் அறிவித்தார்.

ஆகஸ்டு 27, 1969 :

அணுசக்தி கமிஷன் பத்தாண்டு சாதனையை அறிவித்தது. 1980, 1990-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் 400 முதல் 500 மெகாவாட் திறன் கொண்ட விரைவில் அணுப் பெருக்கம் செய்யக் கூடிய அணு உலையைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

நவம்பர் 14, 1969 :

'அலகாபாத்திலுள்ள 'ஆனந்த பவன்' மாளிகையைப் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.



சாகர் சாம்ராட்' பம்பாய் 'ஹை' பகுதியில் எண்ணெய்க் கிணறு தோண்டுதல்!





**ஜனவரி 10, 1970:**

பம்பாயில் தாராப்பூரில் நாட்டில் முதல் அணுசக்தி நிலையத்தை பிரதமர் முறையாகத் துவக்கி வைத்தார்.

**ஜனவரி 23, 1970:**

நாடாளுமன்றத்திலும் மாநில சட்ட மேல்சபைகளிலும் ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர்க்கான இட ஒதுக்கீடு முறையை மேலும் பத்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**பிப்ரவரி 8, 1970:**

ராஜஸ்தானில் 140 அடி உயரம் கொண்ட ராணா பிரதாப் சாகர் அணைக்கட்டைப் பிரதமர் துவக்கி வைத்தார்.

**பிப்ரவரி 9, 1970:**

ராஜஸ்தானில் கோட்டாவில் ரூ. 30 கோடி செலவில் அமைந்த யூரியா உரத் தொழிற்சாலையைப் பிரதமர் துவக்கி வைத்தார்.

**மார்ச் 19, 1970:**

காம்பே வளைகுடாவில் நாட்டில் முதல் கடலோர எண்ணெய்க் கிணறில் துரப்பண வேலையை பிரதமர் துவக்கி வைத்தார்.

**மே 18, 1970:**

மருந்துகள் (விலைக் கட்டுப்பாடு) உத்தரவின்படி அரசு 17 அத்தியாவசிய மருந்துகள் விஷயத்தில் அதிகபட்ச விற்பனை விலையை நிர்ணயித்துள்ளது.

**அக்டோபர் 19, 1970 :**

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் மிக் ரக விமானம், விமானப் படைக்குக் கொடுக்கப்பட்டது.

**பிப்ரவரி 18, 1971:**

ஆர்வி தரை நிலையத்தின் மூலம் இந்தியா முதன் முறையாக செயற்கை கோள் மூலம் தொலைத் தொடர்பு இணைப்பு ஏற்படுத்திக் கொண்டது.

**மே 13, 1971:**

ஜெனரல் இன்ஷூரன்ஸ் (அவசரகால நெறி முறைகள்) அவசரச் சட்டத்தின் படி 42 வெளி நாட்டு கம்பெனிகள் உட்பட 106 ஜெனரல் இன்ஷூரன்ஸ் கன்பெனிகள் அரசுடைமையாக்கப்பட்டன.

**ஆகஸ்டு 2, 1971 :**

கருச்சிதைவு சட்டத்தைச் சுலபமாக்கும் வகை செய்யும் விதத்தில் அமைந்த மருத்துவ முறை கருச் சிதைவு மசோதாவுக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.

**ஆகஸ்டு 9, 1971:**

அமைதி, நட்புறவு ஒத்துழைப்புக்கான 20 ஆண்டு ஒப்பந்தம் ஒன்றில் இந்தியாவும் சோவியத் யூனியனும் கையெழுத்திட்டன.



செயற்கைக் கோள்
ஆர்யப்பட்டா’
விண்வெளியில்
ஏவி விடப்பட்டது

செப்டம்பர் 16, 1971:

அவசரச் சட்டம் பிரகடனம் ஒன்றின் மூலம் பீஹார் மேற்கு வங்காளத்திலுள்ள 814 கோக் கரிச் சுரங்கங்கள் அரசுடைமையாக்கப்பட்டன.

மே 22, 1972:

டிராம்பேயில் பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தில் இந்தியாவிலேயே முதல் ரக விரைவில் அணுப் பெருக்கச் செய்யக் கூடிய அணு உலை ஒன்று செயல்பட ஆரம்பித்தது.

அக்டோபர் 3, 1972:

பொகாரோவில் முதல் ஊது உலை தொழில் தொகுதியை பிரதமர் துவக்கி வைத்தார்.

ஜனவரி 30, 1973:

அரசு 464 நிலக்கரிச் சுரங்க நிர்வாகத்தை மேற் கொண்டது.

ஜனவரி 28, 1974:

1964-ஆம் ஆண்டு சாஸ்திரி-ஸ்ரீமாவோ ஒப்பந்தத்தின் கட்டுக்குள் வராத குடி உரிமை அற்ற இந்திய குடிமகன்களாக இருந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரின் எதிர்காலம் பற்றிய இந்தியா ஸ்ரீலங்கா ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட்டது. 75 ஆயிரம் பேருக்கு இந்தியாவும் பாக்கி யுள்ளவர்களுக்கு ஸ்ரீலங்காவும் குடி உரிமை வழங்க வேண்டும் என்று இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

பிப்ரவரி 2, 1974:

இந்தியாவில் முதல் நகரும் துரப்பண மேடை 'சாகர் சாம்ரோட்' பம்பாய் 'ஹை' பகுதியில் முதல் எண்ணெய்க் கிணறு தோண்ட ஆரம்பித்தது.

ஏப்ரல் 1, 1974

ஏழைமையைப் போக்கி சுயசார்பு அடை வதற்கான குறிக்கோளைக் கொண்ட ஐந் தாவது ஐந்தாண்டுத் திட்டம் செயல் படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் மக்கள்தொகை 60 கோடியே 40 இலட்சம்



இந்தியாவின் மக்கள் தொகை 60 கோடியே 40 இலட்சமாக உயர்ந்துள்ளது.

1975-ஆம் ஆண்டின் இறுதியில் மக்கள் தொகை இந்த அளவை எட்டியுள்ளது. இது 1971-ல் நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் நிலவரத்தைவிட, 10.4 சதவீதம் உயர்வாகும்; அப்போதைய மக்கள் தொகை 54 கோடியே 70 இலட்சம்தான்.

அதாவது ஏறத்தாழ 5 ஆண்டுகளில், நம் நாட்டின் மக்கள் தொகை 5 கோடியே 70 இலட்சம் அதிகமாகி உள்ளது என்று பொருளாகிறது; அதாவது ஆண்டுக்கு 1 கோடியே 10 இலட்சம் குழந்தைகள் பிறந்துள்ளதாகப் பொருள். இந்தத் தொகை மட்டும் ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகைக்குச் சமமாகும்.

1973-ல் 2.1 சதவீதமாக இருந்த மக்கள் தொகைப் பெருக்க விகிதம், 1975-76-ல் 2 சதவீதமாகக் குறையக் கூடும் என்று, மக்கள் தொகை மதிப்பீடு பற்றிய நிபுணர் குழு கருத்து தெரிவித்து இருந்தது. உண்மையிலேயே இவ்வாறு இந்த விகிதம் குறைந்ததா என்பது வரும் மார்ச் 31-ந் தேதியன்று நிலவரப்படி கிடைக்கக்கூடிய மக்கள் தொகை புள்ளிவிவரத்தைப் பார்த்தால்தான் தெரியவரும்.

இந்தியாவின் மக்கள் தொகை 1980-ல், 68 கோடியாக இருக்கும் என்று, இந்திய மக்கள் தொகை பற்றிய ஐக்கியநாடுகள் சங்க மதிப்பீடு கூறுகிறது. 1978-79-ல் இந்திய மக்கள் தொகை 64 கோடியே 20 இலட்சமாக இருக்கும் என்று நம் நாட்டு அதிகாரப் பூர்வ மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

1961 முதல் 1970 வரையிலான பத்தாண்டுக் காலத்திலேதான், இந்தியாவின் மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமாக இருந்தது.

1961-ல் 43 கோடியே 90 இலட்சமாக இருந்த மக்கள் தொகை 1971-ல் 54 கோடியே 70 இலட்சமாக உயர்ந்தது. இந்த உயர்வு விகிதம் 24.6 சதவீதமாகும்; 1951 முதல் 1960 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் மக்கள் தொகை உயர்வு விகிதம் 21.6 சதவீதம்தான்.

இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் மிகவும் குறைவாக இருந்த காலம் 1911 முதல் 1921 வரையிலான பத்தாண்டுக் காலமாகும். இந்தப் பத்தாண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 9 சதவீதம்தான்.

நமது நாட்டில் தேசிய பிறப்பு விகிதம் 1961ல் ஆயிரத்துக்கு 41.7 என்ற கணக்கில் இருந்தது. 1972-ல் 36.6 ஆகக் குறைந்தது. நான்காம் ஐந்தாண்டு திட்ட இறுதியில், இந்த விகிதம் ஆயிரத்துக்கு 35 ஆகக் குறைந்து விட்டது.

ஜெய்—



அமைதிப் பணிகளுக்காக அணுப் பரிசோதனை!

மே 18, 1974:

ராஜஸ்தானில் போகாரானில் அமைதிப் பணிகளுக்காக அணுப் பரிசோதனை நடத்தப்பட்டது.

ஜுன் 25, 1974:

நாக்பூருக்கு அருகே கொரடியிலுள்ள இந்தியாவின் மிகப் பெரிய அனல் மின் நிலையம் மின்சக்தி உற்பத்தியைத் துவக்கியது.

செப்டம்பர் 21, 1974:

103 நலிவடைந்த நெசவாலைகளை அரசு ஏற்றுக் கொள்வதற்கான அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

பிப்ரவரி 5, 1975:

கேத்ரி செப்புச் சுரங்கத் திட்டப் பகுதியில் 31 ஆயிரம் டன் செப்பு உருக்குத் திறன் கொண்ட உலை ஒன்றைப் பிரதம மந்திரி ஸ்ரீமதி காந்தி துவக்கி வைத்தார்.

ஏப்ரல் 10, 1975:

அரபிக் கடலில் பம்பாய் ஹை பகுதியில் 4-வது எண்ணெய்க் கிணற்றில் துரப்பண நடவடிக்கைகளை பிரதம மந்திரி முறையாகத் துவக்கி வைத்தார்.

ஏப்ரல் 19, 1975 :

செயற்கைக்கோள் ஆர்யப்பட்டாவை விண்வெளியில் ஏவி விட்டதன் மூலம் இந்தியா விண்வெளி யுகத்தில் நுழைந்துள்ளது.

ஜுன் 25, 1975:

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் அமைந்த உள்நாட்டு கலவரங்களின் காரணமாக நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது.

ஜுன் 26, 1975:

நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் நிகழ்த்திய உரையில் ஸ்ரீமதி காந்தி கூறியதாவது : 'ஜனநாயகம் என்ற பெயரில் ஜனநாயக முறை அலுவல்களையே மறுக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை. சில மாநிலங்களில் சட்ட ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மேல் சபைகளைக் கலைப்பதற்காக ராஜினமா செய்யும்படி சட்டமன்ற உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

ஜுலை 1, 1975:

பொருளாதாரத்தைப் புதுப்பிப்பதற்காக பிரதம மந்திரி 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தை அறிவித்தார்.

ஆகஸ்டு 1, 1975:

ஆய்வு அடிப்படையிலான, செயற்கைக் கோள் மூலமான டெலிவிஷன் போதனைத் திட்டத்தைப் பிரதம மந்திரி துவக்கி வைத்தார்.

செப்டம்பர் 26, 1975 :

ஒரே அலுவல் விஷயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஊதியத்தில் இருந்த ஏற்றத்தாழ்வுக்கு அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் தடை கொண்டு வரப்பட்டது.

அக்டோபர் 24, 1975:

கொத்தடிமைத் தொழிலை ஒழிப்பதற்கான ராஷ்டிரபதியின் அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

நவம்பர் 11, 1975:

தலைமறைவாகியிருந்த நாகா கலகக்காரர்களின் பிரதிநிதிகளுடன் அடிப்படை விஷயங்களில் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் 20 ஆண்டு கால நாகா பிரச்னைக்கு முடிவு காணப்பட்டது.

நவம்பர் 29, 1975 :

தாமாக முன்வந்து சொத்து, வருமானம் பற்றிக் கணக்குத் தெரிவிக்கும் திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வருமானத்தை தெரிவிப்பவர்களுக்கு சுங்கச் சட்டம் தங்கக் கட்டுப்பாடு சட்டம், ஆகியவற்றைப் பயன்படுத்தி நடவடிக்வடிக்கை எடுப்பதிலிருந்து விலக்கு அளிக்க வகை செய்யும் அவசரச் சட்டம் ஒன்று பிரகடனம் செய்யப்பட்டது.

டிசம்பர் 19, 1975:

கோதாவரி நதி நீரைப் பயன்படுத்தும் விஷயத்தில் ஆந்திரப் பிரதேஷ், கர்னடகம், மத்தியப் பிரதேஷ், மஹாராஷ்டிரம், ஒரிஸ்ஸா ஆகிய ஐந்து மாநில முதலமைச்சர்களிடையே புதுதில்லியில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாயிற்று.

# தமிழ்நாட்டில் மத்திய அரசு ஆதரவில் அமைந்த தொழில் திட்டங்கள்

இந்தியாவில் மகாராஷ்டிரம், மேற்கு வங்காளத்திற்கு அடுத்தபடியாக தமிழ் நாட்டில் தான் மிக அதிக அளவுக்குத் தொழிற்சாலைகள் உள்ளன. இம் மாநிலத்தில் இயற்கை வளங்கள் அதிகமாக இல்லாவிட்டாலும், தொழில் அபிவிருத்தியில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதற்குக் காரணம் மத்திய அரசு பெருமளவுக்கு மூலதனம் இட்டுள்ளது தான். ஐந்தாண்டுத் திட்டங்களின்படி மத்திய அரசு, தமிழ் நாட்டில் அரசுத்துறையில் பல தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. தற்போது மத்திய அரசு ஆதரவில் அமைந்த 11 அரசு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவையாவன:

1. பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனம்,
2. இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி நிறுவனம்,
3. இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம்,
4. 'இண்டியன் டிரக்ஸ் அண்டு பார்மசூட்டிகல்ஸ்' நிறுவனம்,
5. 'இண்டியன் ரேர் எர்த்ஸ்' நிறுவனம்,
6. சென்னை உரத் தொழிற்சாலைகள் நிறுவனம்,
7. சென்னை எண்ணெய் சுத்தி நிறுவனம்,
8. 'மாடர்ன் பேக்கரிஸ்' நிறுவனம்,
9. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன்,
10. எண்ணெய் நிலவாயுக் கமிஷன்,
11. 'ரிச்சார்டுசன் அண்டு குருடார்ஸ்' நிறுவனம்.

**1973 மார்ச் 31-ஆம் தேதி வரை மத்திய அரசு தமிழ்நாட்டில் அரசுத் துறை நிறுவனங்களில் மொத்தம் 352.6 கோடி ரூபாய் மூலதனம் இட்டுள்ளது.**

அரசுத் துறைக்காக மத்திய அரசின் மூலதனம் பெறும் 5 மாபெரும் மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்றாகும். மற்ற மாநிலங்களாவன : பிகார், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம், ஒரிசா.

கார்ப்பொரேஷன்களாகச் செயல்பட்டு வரும் இத்தகைய அரசுத்துறை நிறுவனங்களைத் தவிர, மத்திய அரசு துறைகளும் தனியாக பல தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நடத்தி வருகின்றன. ரயில்வே அமைச்சகத்தின் கீழ் பெரம்பூரில் உள்ள இணைப்பு பெட்டிச் தொழிற்சாலை, மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ஆவடியில் உள்ள கனரக வாகனங்கள் தொழிற்சாலை, அணு சக்தி இலாகாவின் கீழ் உள்ள சென்னை அணு ஆராய்ச்சி நிலையம் ஆகியவை அவற்றில் முக்கியமானவையாகும்.

### படைச்சாதன உற்பத்தி தொழிற்சாலைகள்

நாட்டில் மொத்தம் 25 படைச்சாதன உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் மூன்று மிகப்பெரிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன. அவையாவன: 1. திருச்சியில் உள்ள சிறு படைச் சாதனத் தொழிற்சாலை, 2. அரவங்காட்டில் உள்ள கார்டைட்டுத் தொழிற்சாலை, 3. ஆவடியில் உள்ள ராணுவத்தினருக்கான சீருடைத் தயாரிப்புத் தொழிற்சாலை.

### தேசிய ஆய்வுக் கூடங்கள்

நாட்டில் உள்ள முக்கிய தேசிய ஆய்வுக் கூடங்களில் இரண்டு தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன. அவையாவன: 1. காரைக்குடியில் உள்ள மின் இரசாயன ஆராய்ச்சிக் கழகம், 2. சென்னையில் உள்ள தோல் ஆராய்ச்சிக் கழகம். இந்த ஆய்வுக் கூடங்களைத் தவிர, பல்வேறு தேசிய ஆராய்ச்சிக் கழகங்களின் மண்டல நிலையங்கள் பல தமிழ்நாட்டில் உள்ளன.

### தூத்துக்குடியின் வளர்ச்சி

சென்னைத் துறைமுகம் விரிவாக்கப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், தூத்துக்குடியில் பல தொழிற்சாலைகள் - குறிப்பாக இரசாயனத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருவதால், உள்நாட்டுத் தேவையைப்பூர்த்தி செய்யும் பொருட்டு, 30 கோடி ரூபாய் செலவில் அமைந்த துறைமுகம் ஒன்று அங்கு கட்டப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் மத்திய அரசே கனநீர்த் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது.

**சேலம் எஃகு ஆலை**

துருப்பிடிக்காத 70 ஆயிரம் டன் எஃகு, மின் சாதனத் தயாரிப்புக்கான 75 ஆயிரம் டன் எஃகு, மற்ற 50 ஆயிரம் எஃகு ரகங்கள் ஆகியவற்றை உற்பத்திச் செய்வதற்காக, 518 கோடி ரூபாய் செலவில் அமைந்த எஃகாலை ஒன்று சேலத்தில் அமைக்கப்பட்டு வருகிறது,

தமிழ்நாட்டில் நலிந்து போன நெசவுத் தொழிலுக்கு உதவுவதற்காக மத்திய அரசு நலிவடைந்த நெசவாலைகளின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது. 1974 மார்ச் வரை தேசிய நெசவாலைக் கார்ப்பொரேஷனின் கட்டுப்பாட்டின் கீழ், 14 நலிவடைந்த நெசவாலைகள் செயல்பட்டு வந்தன. அரசு நிர்வாகத்தின் கீழ் இருந்த எல்லா நலிவடைந்த நெசவாலைகளும் தற்போது அரசுடைமையாக்கப்பட்டு விட்டன.

தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான தொழில் பிரிவுகள், மாநில பொருளாதாரம் சிறக்க, சிறந்த பங்காற்றி வருகின்றன. பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதோடு, துணைத் தொழில்களைத் துவக்க உதவுவதன் மூலமாகவும், வேலைவாய்ப்புக்கு வகை செய்துள்ளன.

மின்சக்தி பற்றுக்குறைகொண்ட இம்மாநிலத்துக்கு மின்சாரம் வழங்கி, பொருளாதாரத்தைச் சிறக்கச் செய்வதில் மத்திய அரசுக்குச் சொந்தமான அரசு நிறுவனங்கள் ஆற்றிய தொண்டு மிகக் குறிப்பிடத்தக்கதாகும். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷனின் மின் உற்பத்தி நிலையம் மட்டும் மாநிலத்தின் மொத்த மின் உற்பத்தியில் 40 சதவிகிதத்தை வழங்குகிறது.

**அணுமின் நிலையம்**

மின்சக்தித் தேவை அதிகரித்து வருவதை சமாளிப்பதற்காக 470 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட அணு மின் உற்பத்தி நிலையம் ஒன்று கல்பாக்கத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையம் உற்பத்தியைத் துவக்கியவுடன் மாநில மின்சாரத் தேவை முழுவதும் சரிகட்டப்பட்டு விடும் என்று சொல்லலாம்.

இம்மாநிலத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களின் அலுவல்களும், மாநில பொருளாதாரத்தை சிறக்கச் செய்வதில் அவற்றின் பங்கும் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.



## நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன்

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷனின் கீழ் உள்ள தொழில் தொகுதியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டு அதைக்கொண்டு மின்சக்தி, இரசாயன உரம், பல உபப்பொருட்கள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழில் தொகுதி விரிவாக்கப்பட்டவுடன் அதன் மதிப்பு ரூ. 178 கோடியாக இருக்கும். இக்கார்ப்பொரேஷன் தொழிற்சாலைகளில் சுமார் 18 ஆயிரம் நிரந்தரத் தொழிலாளர்கள் பணி புரிகின்றனர்.

சேலம் எஃகாலை உருவாகி வருவதால் இக்கார்ப்பொரேஷனின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. சேலம் எஃகு ஆலையில் நெய்வேலியில் இருந்து கிடைக்கும் பழுப்பு நிலக்கரி பயன்படுத்தப்படும். 1973-74-ல் 33.29 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டது. பழுப்பு நிலக்கரி உற்பத்தியை 40 இலட்சம் டன்னுக்கு உயர்த்துவதற்காக, 1973 மே மாதத்தில் கூடுதலாக ரூ. 11.62 கோடி மூலதனம் இடப்பட்டது. 65 இலட்சம் டன் பழுப்பு நிலக்கரி உற்பத்தியை உயர்த்துவதற்காக மீண்டும் ரூ. 87 கோடி மூலதனம் இட அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டது.

நாட்டில் பழுப்பு நிலக்கரி அடிப்படையில் அமைந்த இரண்டாவது மிகப் பெரிய அனல் மின் நிலையம், நெய்வேலியில் உள்ள அனல் மின் நிலையமாகும். இந் நிலையத்தின் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 600 மெகாவாட். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷனுக்கும் அதைச் சுற்றியுள்ள நகர்ப்புறத்துக்கும் தேவைப்படும் சிறிதளவு மின்சக்தியைப் பயன்படுத்திக் கொண்டு, பாக்கியை இந் நிலையம் தமிழ்நாடு மின் இணைப்பு அமைப்புக்கு வழங்கிவிடுகிறது. **1974 மார்ச் வரை இந்நிலையம் 1,895 கோடியே 60 இலட்சம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்தது. இதில் சுமார் 1,650 கோடி யூனிட் மின்சக்தியைத் தமிழ் நாட்டுக்கு வழங்கியது.** தமிழ் நாட்டில் மிக மோசமான மின் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த போது, இக்கார்ப்பொரேஷனின் மின் உற்பத்தி நிலையம், இராசயன தொழிற்சாலைக்கும், 'லீகோ' கரி உற்பத்திக்கும் தேவைப்படும்

பழுப்பு நிலக்கரி அளவை குறைத்துக் கொண்டு, மாநில அரசுக்கு கைகொடுத்து உதவியது.

பழுப்பு நிலக்கரியை அடிப் படையாகக் கொண்ட இக்கார்ப் பொரேஷனின் உரத் தொழிற்சாலை யூரியா உற்பத்தியை 1966 மார்ச் மாதத்தில் துவக்கியது. 1972-73-ல் இத்தொழிற்சாலை 45,782 டன் யூரியா உற்பத்தி செய்தது. 1974 மார்ச் இறுதி வரை இத்தொழிற்சாலை மொத்தம் 47.05 இலட்சம் டன் யூரியாவை உற்பத்தி செய்தது. 1973 மார்ச் இறுதிவரை 5.94 இலட்சம் டன் 'லீகோ' கரி உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ் நாட்டிலும் மற்ற அண்டை மாநிலங்களிலும் சமையல் செய்வதற்கு 'லீகோ' கரி எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. பீங்கான் சாமான்கள், கம்பிக் காப்பீடு பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் ஒருவித களி மண்ணையும் இக்கார்ப்பொரேரேஷன் தயாரிக்கிறது.



## இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை

தமிழ்நாட்டில் மிகப் பழைமையான அரசுத் தொழிற்சாலைகளில் ஒன்றான இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் சுமார் 11 ஆயிரம் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். ரயில் பெட்டிகளுக்கான மேற்கூடுகளை தயாரிப்பதற்காக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1955-ஆம் ஆண்டில் பெரம்பூரில் ரூ. 7.35 கோடி செலவில் இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டது. பின்னர் 1962-ல் ரூ. 3.69 கோடி செலவில் இத்தொழிற்சாலை விரிவாக்கப்பட்டது. தற்போது இத்தொழிற்சாலை ஆண்டுக்கு 750 ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் திறன் கொண்டதாக விளங்குகிறது. **1974 மார்ச் வரை இத்தொழிற்சாலை, ரயில் பெட்டிகளுக்கான 10,202 மேற்கூடுகளையும், சுமார் 36 ரகங்கள் கொண்ட 8,252 ரயில் பெட்டிகளையும் தயாரித்துள்ளது.**

இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகத்திலேயே மிகச் சிறந்த ரயில் பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்றாகும். இத்தொழிற்சாலை தயாரிக்கும் பல்வேறு ரயில் பெட்டிகள், ஆசிய, ஆப்ரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. மேலும் அதிக அளவுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

## இந்துஸ்தான் போட்டோ பிலிம் உற்பத்தி நிறுவனம்

இந்நிறுவனத்தின் தொழிற்சாலை 1967 ஜனவரி மாதத்தில் ரூ. 11.67 கோடி செலவில் உதகமண்டலத்தில் அமைக்கப்பட்டது. திரைப்பட பிலிம்சுருள்கள் புகைப்படம் தயாரிப்பதற்கான புரோமைடு காகிதம், 'எக்ஸ்-ரே' பிலிம்கள் போன்றவற்றை இத்தொழிற்சாலை தயாரிக்கிறது. 1973-74-ல் இத்தொழிற்சாலை மொத்தம் 35 இலட்சத்து 35 ஆயிரம் சதுர மீட்டர் பிலிம் சுருளை உற்பத்திச் செய்தது. இதற்கு முந்தைய ஆண்டின் உற்பத்தியை விட இது 20 சதவிகிதம் கூடுதலாகும். கச்சாப் பொருட்களை வழங்குவதற்காக இந்நிறுவனம் ஏற்படுத்திய துணை தொழிற்சாலைகள் சிறந்த பணியாற்றி வருகின்றன.

"அரசியல் சாசனம் நமது மக்களின் தேவைகளையும், குறிக்கோள்களையும் ஈடேற்றிக் கொடுப்பதாய் இருக்குமாறு நாம் அமைக்க வேண்டும்."

—இந்திரா காந்தி



## பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனம்

பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனத்தின் உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை திருச்சியில் உள்ளது. அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் உயர் அழுத்த கொதிகலன்களையும், தொழிற்சாலைகளுக்கான ஒட்டு மொத்தமான கொதிகலன்களையும், உயர் அழுத்த வால்வுகளையும் உற்பத்தி செய்வதற்காக இத்தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. இத்தொழிற்சாலையின் மொத்த மூலதனத் தொகை ரூ. 25.70 கோடி. பாரத கனரக மின்சாதனங்கள் நிறுவனத்தின் 1973-74-ஆம் ஆண்டு மொத்த உற்பத்தி மதிப்பில் கால் பாகம் இத்தொழிற்சாலையைச் சேர்ந்ததாகும். அந்த ஆண்டின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 67.6 கோடி. முந்தைய ஆண்டின் உற்பத்தி மதிப்பைவிட இது 60 சதவிகிதம் கூடுதலாகும். இந்நிறுவனத்தை ரூ. 12.12 கோடி செலவில் விரிவாக்குவதற்கானத் திட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு விட்டது. இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நவீன நுட்ப சாதனங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலமாக, நாட்டிற்கு அந்நியச் செலாவணி கிடைப்பதோடு, இந்திய தொழில் நுட்பத்தின் மதிப்பும் உயருகிறது.

## சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனம்

நாட்டில் உள்ள மிகப் பெரிய ஒரு சில உரத் தொழிற்சாலைகளில் ஒன்று சென்னைக்கு அருகே மணலியில் உள்ள இரசாயன உரத்தொழிற்சாலையாகும். 2.47 இலட்சம் டன் அமோனியாவையும், 2.92 இலட்சம் டன் யூரியாவையும், 3.63 இலட்சம் டன் 'என். பி. கே.' இரசாயன உரத்தையும் உற்பத்தி செய்யக் கூடிய திறன் கொண்டதாகும் இது. 1971 நவம்பரில் இத்தொழிற்சாலை வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் துவக்கியது. 1973-74-ல் இத்தொழிற்சாலை 1.69 இலட்சம் டன் அமோனியாவையும், 2.38 இலட்சம் டன் யூரியாவையும், 2.86 இலட்சம் டன் 'என். பி. கே.' ரசாயன உரத்தையும் உற்பத்தி செய்தது. விரிவாக்கத் திட்டம் ஒன்றின்படி 1974 மே மாதத்தில் இத்தொழில் தொகுதியில் மூன்றுவது தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணி துவங்கியது. இத்தொழிற்சாலையை அமைக்க சுமார் ரூ. 8.5 கோடி செலவாகும்.

இந்நிறுவனத்தில், மிகச்சிறந்த மண் ஆராய்ச்சிக் கூடம் ஒன்று உள்ளது. நாளொன்றுக்கு 200 மாதிரிகளை ஆய்வு செய்யக் கூடியதாகும் இது. மண் மாதிரி ஆய்வுகளின் விளைவுகள் அடிப்படையிலும், கிடைக்கும் நீர், சாகுபடிக்கான பயிர் ஆகியவற்றின் அடிப்படையிலும் இவ்வுர நிறுவனம் விவசாயிகளுக்கு, அதிக உற்பத்திக்கான உரங்களைப் பற்றிய ஆலோசனை அளிக்கிறது.

மேலும் இந்நிறுவனம் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவக் கூடிய இரசாயன உரங்களை பிரபலப்படுத்துவதற்காக 1974-75-ல் சில கிராமங்களை தெரிந்தெடுத்தது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் 21 கிராமங்களை ஏற்றுக் கொண்டு விவசாய உற்பத்திக்கான தனது திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இக்கிராமங்களில் உள்ள விவசாயிகளின் பயிர் உற்பத்திக்கானத் திட்டங்களை வகுப்பதில் அவர்களுக்கு இந்நிறுவனம் உதவுவதோடு, கள விளக்கப் பயிற்சி மூலம் நவீனப் பயிர்த் தொழில்நுட்பத்திலும் பயிற்சி அளிக்கிறது. மேலும் இத்திட்டத்தின்படி விவசாயிகளுக்கு விதைகள், பூச்சி மருந்துகள், கடன் வசதி ஆகியவையும் அளிக்கப்படுகின்றன.

## இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம்

1960-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த அரசு நிறுவனம், ஒரு 'ஷிப்ட்' அடிப்படையில் 5,400 டெலிபிரிண்டர்களையும், இரண்டு 'ஷிப்ட்' அடிப்படையில் 8,500 டெலிபிரிண்டர்களையும்

தயாரிக்கக் கூடிய திறன் கொண்டதாகும். இந்நிறுவனம் இதுவரை 50 ஆயிரத்துக்கும் அதிகமான டெலிபிரிண்டர்களைத் தயாரித்து பல்வேறு உபயோகிப்பாளர்களுக்கு வழங்கி உள்ளது. 1976-77-ல் இந்நிறுவனம் 7,000 டெலிபிரிண்டர்களைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் சுமார் 6,000 டெலிபிரிண்டர்கள் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனத்தின் தொழிற்சாலை மின் அணு டெலிபிரிண்டர், டேப் டெலிபிரிண்டர், மின்சார ஹிந்தி டைப்ரைட்டர், இருமொழி டெலிபிரிண்டர் ஆகியவற்றையும் வடிவமைத்து வருகிறது. கம்ப்யூட்டர் சாதனங்களுக்குத் தேவைப்படும் உதிரி உறுப்புக்களையும் தயாரிக்க நிறுவனம் உத்தேசித்துள்ளது.



## சென்னை எண்ணெய் சுத்தி நிறுவனம்

தென் இந்தியாவின் பெட்ரோலியப் பொருள்கள் தேவையைச் சமாளிப்பதற்காக 43 கோடி ரூபாய் செலவில் அமைந்த எண்ணெய் சுத்தி ஆலையொன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆலை வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1969 ஜூன் மாதத்தில் துவக்கியது. 1973-74-இல் இந்த ஆலையில் 28 இலட்சம் டன் கச்சா எண்ணெய் சுத்தி செய்யப்பட்டது. இந்த ஆலையின் எண்ணெய் சுத்தி திறன் 25 இலட்சம் டன்தான். ஆண்டுக்கு 35 இலட்சம் டன் கச்சா எண்ணெய் சுத்தி செய்யும் விதத்திலும், ரூ. 25 கோடி செலவில் மெழுகு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் விதத்திலும் இந்த எண்ணெய் சுத்தி ஆலை விரிவாக்கப்படவிருக்கிறது.

''நான் அதிருஷ்டத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. பலன் வேண்டுமானால், கடின உழைப்பு வேண்டும். நெடிய நோக்கு இருந்தால்தான் நெடுந்தூரம் செல்ல முடியும். இலட்சியம் பற்றிக் கனவு காணும் திறமையும், சிந்தனைத் திறமையும் பெரிதாக இல்லாவிட்டால், நம்மால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது.''

—இந்திரா காந்தி

## 'இந்தியன் டிரக்ஸ் அண்டு ஃபார்மச் சூட்டிகல்ஸ் நிறுவனம்

'இந்தியன் டிரக்ஸ் அண்டு ஃபார்மச் சூட்டிகல்ஸ்' நிறுவனத்தின் மருத்துவக் கருவிகள் தொழிற்சாலை சென்னைக்கு அருகே ரூ. 4.65 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டது. 25 இலட்டம் மருத்துவக் கருவிகளை தயாரிக்கும் திறன் கொண்டதாக அமைந்த இத்தொழிற்சாலை 1965 செப்டம்பரில் தன் உற்பத்தியைப் பெருக்கியது. 1972-73-இல் இத்தொழிற்சாலை ரூ. 59.26 இலட்சம் மதிப்புள்ள 6.69 இலட்சம் மருத்துவக் கருவிகளை உற்பத்தி செய்தது.



## கனரக வாகனங்கள் தொழிற்சாலை

மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் ஆவடியில் அமைந்துள்ள இத்தொழிற்சாலை கனரக வாகனங்களுக்குத் தேவைப்படும் 'எஞ்சின்கள்', 'கியர்பாக்ஸுகள்,' போரில் உபயோகிக்கும் வாகனங்களுக்குத் தேவைப்படும் உதிரி உறுப்புக்கள் ஆகியவற்றை தயாரிக்கிறது. பிரபல **'விஜயந்தா'** டாங்குகளை உற்பத்தி செய்துவரும் இத்தொழிற்சாலை ராணுவ மீட்பு வாகனங்களையும் தயாரிக்கிறது.

இத்தொழிற்சாலையில் 5,700-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இத்தொழிற்சாலை, தொழிலாளர் நல்வாழ்வுக்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உணவு விடுதி வசதி, மருத்துவ வசதி போன்றவை தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கான தற்போதைய மருத்துவ வசதி விரிவாக்கப்பட்டு வருகிறது.

**எனவே, தமிழ்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதில், இந்திய அரசு பராபட்சமின்றி நடந்து வருகிறது என்பது தெளிவாகிறது.**

## சென்னையில் அறிவியல் நுட்பக் கருவி நிலையம்

நாட்டில் அறிவியல் நுட்பக் கருவிகளுக்காக நான்கு வட்டார நிலையங்களை, மத்திய விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறை நிறுவியுள்ளது. அந்நிலையங்கள்: 1. சென்னை-இந்தியத் தொழில் நுட்பக் கழகம், 2. லக்னோ—மத்திய மருந்து ஆராய்ச்சித் தொழில்நுட்பக் கழகம், 3. பம்பாய்—இந்திய தொழில் நுட்பக் கழகம், 4. கல்கத்தா-போஸ் இன்ஸ்டிடியூட் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு நாடுகளில் வளர்ந்து வரும் நவீன அறிவியல் நுட்பக் கருவிகளை முழுவதும் பயன்படுத்த தனிப்பட்ட நிலையங்களுக்கு இயலாத காரணத்தாலும், அவற்றைப் பராமரிக்க அவை கஷ்டப்பட்டதாலும் இந்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நவீன அறிவியல் நுட்பக் கருவிகள் தயாரிப்புத் துறையில் உள்ள வளத்தைத் திரட்டவும், விஞ்ஞானிகள், கல்விக் கழகங்கள், தொழிற்சாலை ஆகியவற்றுக்குத் தேவையான ஆராய்ச்சி, அனுபவம் முதலிய வசதிகளை அளிக்கவும் இந்நிலையங்கள் உதவும்.

# படமும் செய்தியும்



மைலாப்பூர் அகாடமியின் புதிய கட்டடத்திறப்பு விழாவில் (16.2.76) தமிழக ஆளுநர் திரு. கே.கே. ஷா உரையாற்றினார்.



தலைமைச் செயலகத்தில் 18.2.76 அன்று நடைபெற்ற பத்திரிகைச் செய்தியாளர் கூட்டத்தில் பத்திரிகைச் செய்தியாளர் களிடையே ஆளுநர் அவர்கள்.



சோவியத் நாட்டின் திரைப்படக் குழுவினர் 20.2.76 அன்று சென்னை வந்தனர்.



முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹெரால்டு மாக்மில்லன் அவர்கள் 20.2.76 அன்று சென்னை வந்த போது, அவரைத் தமிழ்நாடு அரசின் சார்பில், பொதுத்துறைத் துணைச் செயலாளர் திரு. கே. ஏ. சுந்தரம் ஐ.ஏ.எஸ்., அவர்கள் வரவேற்றார்.



மத்திய அரசின் மாநிலங்களின் உணவுப் பொருள் வழங்குதல் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. ஏ. சி. ஜார்ஜ் அவர்கள் 23.2.76 அன்று சென்னைக்கு வருகை தந்தார்.



தமிழக ஆளுநர் அவர்களிடம், 23.2.76 அன்று மனு கொடுக்கக் கூடியிருந்த மக்கள் கூட்டம்.

இராயபுரத்தில் நடைபெற்ற குடும்ப நலத் திட்ட முகாமில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர் களுக்கு, ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் 23 2.76 அன்று உணவு வழங்கினார்.



தொங்கா நாட்டுத் தொழிலாளர் துறை அமைச்சர் திரு. பாரோன் வாகா அவர்களைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வரவேற்றார்.





சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 25.2.76 அன்று நடைபெற்ற "கல்லூரி நாள்" விழாவில் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார்.




சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் அன்னை கஸ்தூரிபாய் நினைவுநாள் அஞ்சலி நடைபெற்றது.




கொடிநாள் வசூலில், 1974-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம் முதலிடம் பெற்றமைக்காகத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்குக் கேடயம் வழங்கினார்.



அன்றாடம் உபயோகிக்கும் பொருள்கள் தரம் உள்ளதாக இருக்கிறதா? அளவு சரியாக இருக்கிறதா? என்பதைக் கண்டறிவதற்காகத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 1—3—76 அன்று பல கடைகளில் திடீர் சோதனை நடத்தினார்.




முன்னாள் படைவீரர்கள் நிதியைப் பெருக்குவதில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காக தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம் ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கு தமிழக ஆளுநர் தங்கப்பதக்கம் வழங்கினார்.

வளம் தரு வீதியிலே...

# ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைப்போம்

இன்று வருமான வரி விலக்குக்கான உச்சவரம்பு ரூ. 8000-க்கு உயர்த்தப் பட்டுள்ளது. (இதுவரை இருந்த வரம்பு ரூ. 6000 ஆகும்). இதனால் 7 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். கடந்த ஆண்டு புதிதாக 1.33 லட்சம் பேர் வருமான வரி செலுத்தும் எல்லைக்குள் கொண்டுவரப்பட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளனர்.

சேமிப்புக்கு பல வகையிலும் ஊக்கம் கொடுக்கப்படுகிறது. (ரூ. 4000 வரை சேமிப்புக்கு வரி ஏதுமில்லை) வரி ஏய்ப்போருக்கும் கடுந் தண்டனை காத்திருக்கிறது.



**நெஞ்சில் உரமும்**
**செயலில் திறனும்**
**உறுதுணை நிற்கும்**

davp 75/484




மத்திய அரசு, மாநிலங்களுக்கு முக்கியமாக இரு வழிகள் மூலம் நிதி உதவி அளிக்கிறது.

(1) நிதிக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப திட்டத்தில் சேராத நிதித் தேவைகளை அளிப்பது.

(2) மாநில அரசுத் திட்டத்தின்படி, தேசிய அபிவிருத்தி சபை மூலம் நிதி உதவி அளிப்பது.

ஆருவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் நடப்புத் திட்ட காலத்தில் மாநிலங்களுக்கு நிதி தாராளமாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கள் மாற்றும் நடவடிக்கை கணிசமான அளவுக்கு அதிகரித்துவிட்ட போதிலும், இக்குழு வகுத்த கடன் நிவாரணத் திட்டம். மத்திய அரசுக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் மாநில அரசுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை நிதிக் குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில் அமைந்த பொறுப்புக்கள் மாற்றும் திட்டத்தின் மூலமாக, நடப்பு ஆண்டில்; மத்திய வரிகள் பங்கு 105 கோடியாக இருக்கும். அது மட்டுமல்லாமல், ஐந்தாவது திட்ட காலத்தில் இம் மாநில அரசு 87.05 கோடி ரூபாயை கடன் நிவாரணமாக மத்திய அரசிடமிருந்து பெறும். இக் கடனை, இம்மாநில அரசு திருப்பிக் கொடுத்தாக வேண்டும். நடப்பு ஆண்டின் கடன் நிவாரணத் தொகை 17 கோடி ரூபாய் ஆகும்.

திட்டத் துறையைப் பொறுத்த வரை, 1974—75-இல் மாநில அரசின் அங்கீகரிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 112 கோடி ரூபாயாக இருந்தது. கடன் நிவாரணத்திற்கான வேலை வாய்ப்பு நிதிக்கான முக்கிய துறைகளின் நிதி தேவைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் திட்ட ஒதுக்கீடு ரூ. 142.59 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. திட்டத்திற்கான மத்திய அரசின் நிதி உதவி விநியோக முறையின்படி, சாதாரணமாக ரூ. 41.15 கோடி மாநில அரசுக்கு அளிக்கப்படுகிறது. மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியதிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுத்தொகையாகிய ரூ. 142.59 கோடியை மாநில அரசு ஏற்க வேண்டுமென்ருல், ரூ. 15 கோடிக்கு நிதி வளத்தில் பற்ருக்குறை ஏற்படும். இந்தப் பற்ருக்குறையைச் சரிக்கட்ட மத்திய அரசு ரூ. 15 கோடியை முன் திட்ட உதவியாக அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

மாநில அரசுத் திட்டத்தில் தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டது. இத்திட்டப் பணி முன்னேற்ற அடிப்படையில், நடப்பு ஆண்டில் மேலும் ஒரு கோடி ரூபாயை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு கோடி ரூபாயையும் கூடுதல் முன் நிதி உதவியாக அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மாநிலத் திட்டத்திற்காக இம்மாநில அரசு, மொத்தம் ரூ. 57.15 கோடியை மத்திய அரசு உதவியாகப் பெறும்.

வறட்சி நிவாரணப் பணிக்கான நிதித் தேவையையும் மத்திய அரசு உணர்ந்து அவ்வப்போது பூர்த்தி செய்து வருகிறது. மத்திய அரசு நிபுணர்க் குழு மதிப்பீடு செய்த பிறகு, 1975 ஜனவரி — மார்ச் வரையிலான காலத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கான செலவுகளுக்காக, மத்திய அரசு 1974—75-இல் ரூ. 7.5 கோடியை முன் உதவித் தொகையாக அளித்துள்ளது. நடப்பு ஆண்டுச் செலவினங்களைப் பொறுத்த மட்டில் மாநில அரசின் ஆண்டுத் திட்டங்களை வகுக்கும்போதே, வறட்சி நிவாரணத் தேவைப் பற்றி கருத்தில் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக மாநில அரசின் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 142.59 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. பாசன வசதி, சாலை அபிவிருத்தி, மண் வளப் பாதுகாப்பு, குடிநீர் வழங்குதல் போன்ற வேலை வாய்ப்பை உருவாக்கக் கூடிய துறைகளுக்குப் போதுமான அளவு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. இந்தத் திட்ட ஒதுக்கீட்டுக்கான நிதியை மாநில அரசு பெறுவதற்காக, சாதாரண திட்ட உதவித் தொகையாக ரூ. 41.15 கோடியுடன் கூடுதலாக ரூ. 15 கோடியை முன் திட்ட நிதி உதவியாக அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

வறட்சிப் பணிக்காக தேவைப்படும் நபர்கள் பற்றி மதிப்பீடு செய்ய மத்திய அரசுக் குழுவொன்றும் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்தது. திட்டத்தின் மூலம் 3.5 கோடி ஆள் நாட்களை மாநில அரசு திரட்ட முடியும் என்பதை அக்குழு கண்டுபிடித்துள்ளது. குஜராத், ராஜஸ்தான், ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேஷ் போன்ற வறட்சியினுல் பாதிக்கப்பட்ட மாநிலங்களைப் பொறுத்த வரையில் எந்தக்கொள்கையை மத்திய அரசு கடைப்பிடிக்கிறதோ அதே கொள்கையைத்தான், தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையிலும் கடைப்பிடிக்கிறது. மேலும் வறட்சி நிவாரணத்திற்காக கடந்த ஆண்டில் மத்திய அரசு திட்ட உதவியாக அளிக்கப்பட்ட ரூ. 7.5 கோடியைச் சரிக்கட்டுவதற்கான அலுவல் இந்த ஆண்டு துவங்கிய போதிலும், மாநில அரசின் நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, அந்த ஏற்பாடு நடப்பு ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

# காதி கிராப்ட்




உடல் மணக்க 'குறிஞ்சி' சோப். உடை வெளுக்க 'கோபுரம்' சலவை சோப். தித்திக்கும் தூய தேன். 'அக்மார்க்' செக்கெண்ணெய். தோல் காலணிகள், கைப்பைகள். வீட்டை அலங்கரிக்க கலைப் பொருட்கள். தினசரி உபயோகத்திற்கு பிரம்பு, மூங்கில், மற்றும் பனைப் பொருட்கள். வேலைப்பாடு மிக்க மட்பாண்டங்கள்.

அழைப்பு விடுக்க கைக் காகிதங்கள். மலிவு தீப்பெட்டிகள். கதர் பருத்தி, கதர் சில்க் துணிவகைகள். இவற்றை வாங்கி மகிழ்வீர்.

கிராமக் கைவினைஞர்கள் நல்வாழ்வு பெற அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குவீர்

தரமானது ... மலிவானது ... இவை வாங்கிட
தமிழகமெங்கும் 180 காதி கிராப்ட்கள்.

**காதி கிராப்ட்**

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம்,
'குறளகம்', எஸ்ப்ளனேடு, சென்னை-600 001.

KK/381

# விலைகள் குறைந்தன

இன்றியமையாப் பொருள்களின் விலைவாசியைக் குறைப்போம்''! என்பது இருபது அம்சத் திட்டத்தின் முதல் அம்சத்தில் ஒரு அங்கமாகும். இந்த இலட்சியம் தற்பொழுது தமிழ் நாட்டில் நிறைவேறி வருகிறது. ஆம்! தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியின் முதல் மூன்று வார காலத்தில், உணவுத் தானியங்கள் மற்றும் சில இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் கணிசமான அளவு குறைந்துள்ளன!

நடுத்தர ரக அரிசியைப் பொறுத்த வரையில் விலை குறைந்துள்ளது. 1976 ஜனவரி 31-ஆம் தேதி, திருச்சிராப்பள்ளியில் ஒரு கிலோ ரூ. 1.80 ஆக விற்பனை செய்யப்பட்ட நடுத்தர ரக அரிசி பிப்ரவரி 21-ஆம் தேதியன்று ஒரு கிலோ ரூ. 1.50ஆகக் குறைந்துவிட்டது. அதே காலத்தில், மதுரையில் அந்த அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.2.00—லிருந்து ரூ. 1.70 ஆகக் குறைந்துள்ளது. நாகர்கோவிலில் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.10-லிருந்து ரூ. 1.80 ஆகச் சரிந்துள்ளது. பிப்ரவரி 21-ஆம் தேதி தஞ்சாவூரில் அந்த அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50.

கடலை எண்ணெய் விலையும் மிக அதிகமாக குறைந்துள்ளது. 15 சதவிகிதம் வரையில் விலைக் குறைவு உள்ளது. சேலத்தில் கடலை எண்ணெயின் விலை ரூ. 5.20லிருந்து ரூ. 4.40 ஆகவும், திருச்சியில் ரூ. 5.50 லிருந்து ரூ. 4.90 ஆகவும் குறைந்துள்ளது. ஜனவரி 31-ஆம் தேதி சென்னையில் கிலோ ஒன்று ரூ. 5.30க்கு விற்பனை செய்யப்பட்ட கடலை எண்ணெயின் விலை ரூ. 4.90 ஆகக் குறைந்துவிட்டது. மதுரையில் ரூ. 5.50 லிருந்து ரூ. 5.00-ஆக அதன் விலை குறைந்துள்ளது.

நல்லெண்ணெய் விலை சேலத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ. 7.69 லிருந்து ரூ. 6.80 ஆகக் குறைந்துள்ளது. நல்லெண்ணெயின்விலை தஞ்சாவூரில் ரூ. 7.10-லிருந்து ரூ. 6.80 ஆகவும், புதுக்கோட்டையில் ரூ. 7.36-லிருந்து ரூ. 7.14 ஆகவும், காஞ்சீபுரத்தில் ரூ. 8.25 -லிருந்து ரூ. 8.00 ஆகவும் குறைந்துவிட்டது.

காஞ்சீபுரம், சேலம், தருமபுரி, மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் தேங்காய் எண்ணெயும் குறைந்த விலையில் விற்கப்படுகிறது. சேலத்தில் அதன் விலை அதிகமாகக் குறைந்துள்ளது. கிலோ ஒன்றின் விலை ரூ. 9.79 -லிருந்து ரூ. 9.00 ஆகக் குறைந்துவிட்டது. மிகக் குறைந்த விலை நாகர்கோவிலில் பதிவாகியுள்ளது.

தானியங்களில், துவரம்பருப்பின் விலை அதிகமாகக் குறைந்துள்ளது. நாகர்கோவிலில் அதன் விலை 20 சதவிகிதம் குறைந்து கிலோ ஒன்று ரூ. 2.40-க்கு விற்கப்படுகிறது. கடலூர், சென்னை, தர்மபுரி ஆகிய ஊர்களில் பிப்ரவரி 21-ஆம் தேதி அது ரூ. 2.30 -க்கு விற்கப்பட்டது. ஆனால் ஜனவரி 31-ஆம் தேதி அதன் விலை ரூ. 2.60 ஆக இருந்தது. விருதுநகரில் அதன் விலை ரூ. 2.00.

விருதுநகரில் உளுத்தம் பருப்பின் விலையும் தனிப்பட்ட சரிவுப் போக்கைக் காட்டுகிறது. அதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.55 -லிருந்து ரூ. 2.15 ஆகத் தாழ்ந்துவிட்டது.

மிளகாய் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. சென்னையில் அதன் விலை 33.3 சதவிகிதம் குறைந்துள்ளது. மிளகாய் கிலோ ஒன்று ரூ. 8.00க்கு விற்கப்படுகிறது. ஆனால் ஜனவரி 31-ஆம் தேதி அதன் விலை ரூ. 12.00 ஆக இருந்தது. நாகர்கோவிலில், மிளகாயின் விலை 30 சதவிகிதம் குறைந்துவிட்டது. அங்கு அதன் விலை ரூ. 10—லிருந்து ரூ. 7 ஆகத் தாழ்ந்துவிட்டது. மற்ற இடங்களில் மிளகாயின் விலையில் 15 முதல் 20 சதவிகிதம் வரையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதைப் போலவே புளியின் விலை கடலூரில் 30 சதவிகிதமும், சென்னையில் சுமார் 11 சதவிகிதமும் குறைந்துள்ளது. அதன்விலை கடலூரில் கிலோ ஒன்றுக்கு ரூ. 3.25—லிருந்து ரூ. 2.25 ஆகவும், சென்னையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 2.60—லிருந்து ரூ. 2.30 ஆகவும் குறைந்துவிட்டது.

வெங்காயத்தின் விலைகள், திருச்சியில் 40 சதவிகிதமும், கோயமுத்தூரில் 35 சதவிகிதமும் தஞ்சாவூர், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் 33 சதவிகிதமும் குறைந்துள்ளது. சென்னையிலும்; திருச்சிராப்பள்ளியிலும் வெங்காயம் இப்பொழுது கிலோ ஒன்று 60 காசுக்கு விற்கப்படுகிறது. முன்பு, அதன் விலை 90 காசாக இருந்தது. தஞ்சாவூரில் மூன்று வாரங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ. 1.20-க்கு விற்பனை செய்யப்பட்ட வெங்காயம், இப்பொழுது 80 காசுக்கு விற்கப்ப்டுகிறது.

வெல்லத்தின் விலையும் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது. திருநெல்வேலியில், கிலோ ஒன்றுக்கு ரூ. 2.60—லிருந்து ரூ. 2.20 ஆக அதன் விலை சரிந்துள்ளது. திருச்சிராப்பள்ளியில் வெல்லத்தின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.90-லிருந்து ரூ. 2.20 -க்கு இறங்கிவிட்டது.

பிப்ரவரி முதல் வாரத்தில், சில பொய்க் காரணங்களால் மதுரையில் சில பண்டங்களின் விலைகள் உயர்வைக் காட்டின. ஆனால் மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, வியாபாரிகளைக் கடுமையாக எச்சரிக்கை செய்த பிறகு, அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் பாராட்டத் தக்க வகையில் குறைந்துள்ளன.

இதே சமயத்தில், மற்ற இன்றியமையாப் பண்டங்களின் விலையில் எந்த உயர்வும் இல்லை.

## எப்போதோ நெடுங்காலம் கழித்துத் தான் பயன்தருவதா ஆயுள் இன்ஷ்யூரென்ஸ்? அதுதானில்லே. விரைவில் வருவாய் பெற வழி உள்ளது உங்களுக்கும் உங்கள் மனைவி மக்களுக்கும்; எப்படி என்று பாருங்கள் இதோ:

### எல்ஐஸீயின் "மணி பேக்" (பண மீட்பு) திட்டம் பற்றிப் படித்தறியுங்கள்.



**நல் வாழ்வுடன் பாதுகாப்பு**

முப்பது வயதிலே நீங்கள் ஓர் 20-ஆண்டு ''பணமீட்பு'' பாலிஸி எடுப்பதாக வைத்துக்கொள்வோம். மாதம் ரூ. 75.30தான் நீங்கள் கட்டவேண்டும். நீங்கள் பெறும் தொகைகள் பின்வருமாறு:

10 ஆண்டுகள் கழித்து ரூ. 3,000.
அதோடு கூட, 5 ஆண்டுகள் கழித்து ரூ. 3,000.
அதோடுகூட,மேலும் 5 ஆண்டுகள் கழித்துரூ. 14,280*
ஆக மொத்தம் ரூ.. 20,000.

இந்த 20 ஆண்டுகளுக்குள் பாலிஸிதாரர் இறக்க நேரிட்டால், அவருடைய குடும்பம், ஏற்கனவே பெற்




றுக்கொண்ட தவணைத் தொகைகளுக்கும் மேலாக முழு இன்ஷ்யூரென்ஸ் தொகையான 15,000 ரூபாயையும் பெறும்.**

* தற்போதுள்ள விகிதங்களில் போனசும் இதில் அடங்குகிறது.

** இது ஒரு உதாரணமே தவிர, உங்களுக்குக் கட்டுப்படியாகும் சக்திக்கேற்ப, பெரிய தொகைக்கோ, சிறிய தொகைக்கோ பாலிஸி எடுத்துக்கொள்ளலாம்



நீங்கள் பணிபுரியுமிடத்திலேயே சம்பளச்சேமிப்புத் திட்டத்தின்மூலம் ஏதேனும் ஒரு வித எல்ஐஸி பாலிஸியை எடுத்துக் கொள்ளுங்களேன். உங்கள் சார்பிலே பிரீமியங்களைச் செலுத்திவரும் பொறுப்பு உங்கள் எசமானருக்கு உண்டு; இந்தப் பிரீமியங்களோ சாதாரண மாதாந்தரப் பிரீமியங்களைவிடக் குறைவானவையே.



**தேவைப்படும் போது பணம்.**

கல்வி, மருத்துவம், விடுமுறை, திருமணம்.. எதற்காயினும் சரி, அவ்வப்போதையத் தேவைகளுக்கு வேண்டிய பணம் கிடைத்துவிடும் உங்களுக்கு. அதையும் தவிர, பிரீமியங்கள்மீது வருமானவரித் தள்ளுபடியும் கிடைக்கும்.

### லைப் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ஆயுள் இன்ஷ்யூரென்ஸ் போல் ஆதரவு தருவது எதுவுமில்லே.

dCA/LIC/8a Tam.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக புதிய கண்டுபிடிப்புகள்!

## 1. களர் நிலங்களைச் சீர் திருத்தும் சீரிய வழி!

களர் நிலங்களைச் சீர்திருத்தும் முறைகளை உழவர்களுக்கு விளக்க, தேசிய நிரூபணத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் 1972-ஆம் ஆண்டு செயல் விளக்கப் பாத்தி அமைக்கப்பட்டது.

விளக்கப் பாத்தி அமைத்த போது (1972) மண்ணின் கார-அமிலத் தன்மை 9.8 (pH) என்று இருந்தது. சாகுபடிக்கு ஏற்ற மண்ணின் கார-அமிலத்தன்மை 6.5 முதல் 7.5-க்குள் இருக்க வேண்டும். ஆகவே, 'பி.எச்' 9.8 என்பது அமிலத்தன்மையைக் காட்டுகிறது. இதைப் போக்க முதல் ஆண்டில் 'ஜிப்சம்' உப்பை எக்டேருக்கு 12.5 டன் என்ற அளவில் போடப்பட்டது. மண்ணின் சரிவிற்கு ஏற்ப போதிய வடிகால் வசதிகள் அமைக்கப் பட்டன. 'கெட்டு' (Gettu) என்ற உவர் நிலத்தில் வளரக் கூடிய நெல்லை இந்நிலத்தில் சாகுபடி செய்ததில் எக்டேருக்கு 1,267 கிலோ மகசூல் கிடைத்தது.

இரண்டாம் ஆண்டில் மண்ணின் கார-அமிலத் தன்மையின் அளவு காண பரிசோதனை செய்ததில், 'பி.எச்' 9.3 எனக் குறைந்தது. தக்கைப்பூண்டு (Daincha) என்ற பசுந்தாள் உரப்பயிரைக் கோடையில் பயிர் செய்து மடக்கி உழப்பட்டது. பயிர் செய்யும் பருவத்தில் மண்ணைப் பரிசோதித்தபோது, 'பி.எச்' 8.1 எனக் காணப்பட்டது. 'ஜிப்சம்' உப்பை எக்டேருக்கு 7.5 டன் என்ற அளவில் போட்டுச் சாகுபடி செய்யப்பட்டது. 'பி.வி. ஆர். 1', 'ஐ. ஆர். 20' என்ற நெல் இரகங்கள் சாகுபடி செய்யப்பட்டன. 'பி.வி.ஆர். 1' நெல் எக்டேருக்கு 1,400 கிலோ என்ற அளவிலும், 'ஐ.ஆர். 20' நெல் எக்டேருக்கு 3,285 கிலோ என்ற அளவிலும் மகசூல் கொடுத்தது. நெல்லை அடுத்து ராகிப் பயிர் செய்ததில் எக்டேருக்கு 1,284 கிலோ மகசூல் கிடைத்தது. இரண்டாம் ஆண்டு முடிவில் மண்ணைப் பரிசோதித்த போது, மண்ணின் 'பி.எச்' 7.8 என்ற அளவில் இருந்தது. அதாவது மண் சாகுபடிக்கு ஏற்ற நிலமாக மாறிக் கொண்டே வருகிறது எனத் தெரிகிறது.

ஆதலால் தங்கள் நிலங்களில் மகசூல் குறைவாகப் பெறும் உழவர்கள் மண்ணைப் பரிசோதித்து மண்ணின் தன்மையைத் திருத்தி அதிக இலாபம் பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## 2. நெல்லில் தண்டு துளைப் பானைத் தடுக்க குருணை மருந்துகள்!

நெல்லில் தண்டுத் துளைப்பானைத் தடுக்கக் குருணை மருந்துகள் ஏற்றவை எனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இதனை உழவர்களுக்குக் கண்கூடாகக் காண்பிக்க மதுரை மாவட்டத்தில் உள்ள நாச்சிக்குளம், வீரபாண்டி என்ற இரு கிராமங்களில் தேசிய நிரூபண பாத்திகளில் விளக்கம் செய்யப்பட்டது. 'டயாஸினன்' குருணைகள் 'ஐ. ஆர். 20' நெற் பயிரில் போடப்பட்டது. இதனால் தண்டுத் துளைப்பான் தாக்குதல் வெகுவாகக் குறைந்துவிட்டது. தண்டுத் துளைப்பானின் நாசம் 1 முதல் 4 சதவீதத்திற்குள் கட்டுப் படுத்தப்பட்டது.

குருணை மருந்துகள் இடாத நெல்லில் தண்டுத் துளைப்பானின் தாக்குதல் அதிகமாகி மகசூல் வெகுவாகக் குறைந்து காணப் பட்டது. ஆனால் குருணைகள் போட்ட நெல்லில் இரு கிராமங்களிலும் மகசூல் எக்டேருக்கு 7,933 கிலோ, 7,808 கிலோ என்று கிடைத்துள்ளது. இதிலிருந்து 'டயாஸினன்' குருணைகள் தண்டுத் துளைப்பானைக் கட்டுப் படுத்தியதோடு மகசூலையும் அதிகரித்தது என்பது தெளிவாகியுள்ளது.

எனவே, தண்டுத் துளைப்பானைத் தடுக்க 'டயாஸினன்' போன்ற குருணை மருந்துகளை உபயோகிக்கவும்.

## 3. கம்பிற்கு ஏற்ற களைக் கொல்லி!

களைகள் பயிரையே அழித்து விடும். களை எடுக்காப் பயிர் நாசம் ஆகிவிடும். இதை விவசாயிகள் அனுபவ ரீதியாகக் கண்டு, கைகளாலோ, அல்லது களைக்கொத்து கொண்டோ களைகளைப் பயிரிலிருந்து அகற்றுவதுண்டு. இதற்கு அதிக ஆட் செலவும், பணச் செலவும் ஏற்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் செய்த ஆராய்ச்சியில் இராசாயனக் களைக் கொல்லிகளை உபயோகித்துக் களைகளை ஒழிப்பது, களைகளை அறவே ஒழிக்க வழி செய்வதுடன், செலவும் கணிசமாகக் குறைகிறது என்பது தெரிய வருகிறது.

கை விதைப்பு செய்த 'எச்.பி. 3' வீரிய ஒட்டுக் கம்பில் களை கொல்லி கொண்டு களை ஒழிப்பது பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டது. முளைக்கும் முன் தெளிப்பு முறையில் 'அட்ரசீன்' (Atrazin) 0-375 கிலோ வீரியக் கலவையைத்

நெல் தண்டுத் துளைப்பான்





தெளித்ததில் களைகள் அறவே ஒழிக்கப்பட்டன. ஒரு எக்டேருக்கு 104 ரூபாய் செலவும் மீதமாகியது. இது எப்படி என்று கேட்கிறீர்களா? களைகொத்து மூலம் களை எடுப்பதற்கு எக்டேருக்கு ரூ. 160 செலவு ஆகியது. ஆனால் களை கொல்லி தெளிப்பதற்கு ஆன செலவு மருந்து உட்பட ரூ. 56 மட்டுமே. ஆகவே, ரூ. 104 செலவு மிச்சம்தானே. ஆகவே, விவசாயிகள் கம்பிற்கு களை எடுக்க இரசாயனக் களைக் கொல்லியை உபயோகப்படுத்தி செலவைக் குறைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## 4. விதைகளைக் கெடாமல் பாதுகாக்க ஒரு புதிய முறை!

பயிர் அறுவடைக்குப்பிறகு உழவர்கள் விதைக்கெனச் சேமித்து வைப்பது வழக்கம். அவ்வாறு சேமித்து வைக்கும்போது பூச்சிகள் தாக்கி கெட்டுப்போவதுண்டு. அவ்வாறு கெடாவண்ணம் பாதுகாப்பது எப்படி எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்கீழ் உள்ள மதுரை வேளாண் கல்லூரி பூச்சியியல் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. நெய்வேலியில் கிடைக்கும் வெண் களிமண் பரிசோதனைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலில் இவ்வெண் களிமண்ணை அமிலம் வெப்பம் கொண்டு ஊக்குவிக்கப்பட்டது. இவ்வாறு ஊக்குவிக்கப்பட்ட களி மண்ணை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் எனத் தட்டைப் பயறு (காராமணி) விதையுடன் கலக்கப்பட்டது. இதனால் தட்டைப் பயறு விதையைத் துளைக்கும் வண்டிலிருந்து 225 நாட்களுக்குப் பாதுகாக்க முடிந்துள்ளது. 'பாரத்தியான்', 'டி. டி. டீ' தூள் போட்டுப் பாதுகாத்தால் இவ்வண்டிலிருந்து 125-165 நாட்கள்தான் பாதுகாக்கமுடியும். மக்காச்சோளம் விதையுடன் இக் களிமண்ணை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து வைத்ததில் 150 நாட்களுக்கு வண்டுகள் தாக்கா வண்ணம் பாதுகாக்கப்பட்டது.

இந்த மண்புழுக்கள் சிவப்பு நிறமாக 5 செ. மீ.-7 செ. மீ. (2 அங்குலம் முதல் 3 அங்குலம்) நீளமாயும், நூல் போல் சன்னமாயும் இருக்கும். நெல் நாற்றை நட்டவுடன், நாற்றைச் சுற்றி 4 செ. மீ. உயரத்திற்கு மண்ணைத் தள்ளிவிடும். இவ்வாறு நாற்றைச் சுற்றி 4 செ. மீ. உயரத்திற்கு மண் அணைத்து நாற்றுக்களை இறுக்கித் தூர் விடாமல் செய்து விடுகின்றன. இந்த மண் புழுக்கள் நெற் பயிரின் வேர் பாகத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு தூர் கட்டாமல் போவதனால், பயிர் வளர்ச்சி அடையாமல் மகசூல் குறைந்துவிடுகின்றது.

இதனைத் தடுக்கச் செய்த ஆராய்ச்சியில்,'என்டோசல்பான்' 4 சதக் குருணைகளை எக்டேருக்கு 25 கிலோ வீதம் போட்டதால் நல்ல பலன் கிடைத்தது. மண் புழுத் தொல்லையைக் கட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல், நெற் பயிர் முழுவளர்ச்சி அடைவதற்கும் இம்முறை உதவி செய்தது.

## 6. சூரியகாந்தியில் அதிக மகசூல் பெற வழிகள்!

சூரியகாந்தியில் பல இரகங்கள் உள்ளன. அவற்றை கோவை மாவட்டத்திற்கு ஏற்றதா எனப் பரிசோதனைச் செய்ததில் 'சன் ரைஸ்' (Sun Rise) என்ற இரகம் ஏற்றது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மாத இடைவெளியில் ஆண்டு முழுவதும் விதைத்து மகசூலைப் பார்த்ததில், ஆகஸ்ட், ஜனவரி மாத விதைப்புகள் அதிக மகசூலைக் கொடுத்தன. வரிசைக்கு வரிசை 45 செ. மீ. இடைவெளியிட்டு நடுதல் நல்லது எனவும் கண்டு பிடித்துள்ளார்கள். மண்ணின் ஈரத்தன்மை 60 சதவீத அளவு இருக்கும்படியாக நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும் எனவும் கண்டு பிடித்துள்ளார்கள்.



## 7. நெல்லுக்கு யூரியா தெளிப்பதால் அதிக இலாபம்!

'ஐ. ஆர். 20' நெல்லில் யூரியா உரத்தைத் தெளித்தால் மகசூல் அதிகரிக்கிறதா எனப் பரிசோதித்து பார்த்ததில், 10.5 சதவீதம் அதிக மகசூல் கண்டுள்ளது எனக் கண்டுபிடித்துள்ளார்கள். எக்டேருக்கு 125 கிலோ தழைச்சத்து (625 கிலோ அம்மோனியம் சல்பேட்) அடியுரமாகவும், 75 கிலோ தழைச்சத்து (375 கிலோ அம்மோனியம் சல்பேட்) மேலுரமாகவும் போட்ட நெல்லின் மகசூலை, யூரியா தெளித்த நெல்லுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. எக்டேருக்கு 625 கிலோ அம்மோனியம் சல்பேட் அடியுரம் போட்டு அத்தோடு தூர்கட்டும் பருவத்திலும், கதிர் வெடிக்கும் பருவத்திலும் 1 சத யூரியா தெளிக்கப்பட்டது. இவ்விரண்டு முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் யூரியா தெளித்த வயலில் 10.5 சதவீதம் அதிக மகசூல் கிடைத்துள்ளதுடன், உரச் செலவும் குறைகிறது என்பது தெளிவாகியுள்ளது.

## 8. சிறந்த தீவனப் புல்!

தீவனப் புல்லில் கம்பு×நேப்பியர் வீரிய ஒட்டு என்ற புல்லினத்தில் ஏழு இரகங்கள் உள்ளன. அவற்றில் எது நல்ல மகசூல் தரும் என கோவையில் ஆராய்ச்சி செய்தார்கள். அவற்றில் லூதியானாவில் இருந்து கொண்டு வந்த 'என். பி. 21' (N. P. 21) என்ற வீரிய இரகமும், தார்வாரிலிருந்து கொண்டு வந்த 'காமதேனு' என்ற இரகமும் அதிக மகசூல் கொடுத்தன. எக்டேருக்கு 'என். பி. 21' இரகம் 27.80 டன் பச்சைப் புல்லையும், 'காமதேனு' இரகம் 26.95 டன் பச்சைப் புல்லையும் ஒரு அறுப்பில் தந்தன.



சிறந்த தீவனப் புல் — என்.பி. 21

## 9. ராகியில் குறைந்த செலவில் களைகளை ஒழிக்கும் முறை!

ராகி சிறு தானியங்களில் ஒன்று. ராகிப் பயிரில் கோ. 1, கோ. 7, கோ. 10 போன்ற பல ரகங்கள் விவசாயிகள் மத்தியில் பிரபலமடைந்துள்ளன. அவற்றில் கோ. 10 ரகம் கடைசியாக வெளியிட்ட உயர் விளைச்சல் இரகமாகும். இது ஒரு குறுகிய காலப் பயிர். இப்பயிரில் களை எடுக்காவிட்டால் மகசூல் வெகுவாகப் பாதிக்கப்படும். ஆதலால் ராகிப் பயிருக்கு களை எடுப்பது மிகவும் இன்றியமையாதாகும்.

களைகளை களைக்கொத்தியோ அல்லது கைகொண்டு பிடுங்கி எறிதலோ வழக்கமாகத் தொன்று தொட்டுக்கையாளும் முறை. களை கொல்லி என்னும் இரசாயனப் பொருள் கொண்டு அழிக்கும் முறை தற்கால நவீனமுறை. கூலி ஆட்கள் கொண்டு களை எடுத்தால், இலாபமா அல்லது களைகொல்லி உபயோகித்தால் இலாபமா என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் பாண்டிச்சேரியில் உள்ள 'கிரிஷி விக்யான் கேந்தரா' என்ற பயிற்சி நிலையத்தில் ஆராய்ச்சி செய்தார்கள். களைகள் முளைக்கும் முன்னே அடிக்கப்படும் மருந்தான வீடோன் 1.5 லி/எக்டேர்+டோக் ஈ25 சதம் 3.5 லிட்/எக்டேர் என்ற மருந்துக் கலவைகளை ஒரு பாத்தியிலும், கிரமோக்ஸோன் 1.5 லி/எக்டேர்+பெர்னுக்ஸோன் 0.75 கிலோ/எக்டேர் மறு பாத்தியிலும் தெளித்துப் பரிசோதித்துப் பார்த்தார்கள். களைகள் 80-82 சதவீத அளவு மேற்கூடிய மருந்துகளால் கட்டுப்படுத்தப் பட்டன. களை எடுக்காத பாத்தியில் எக்டேருக்கு 1,663 கிலோ என்ற அளவில்தான் மகசூல் கிடைத்தன. களைக்கொல்லி அடித்தப் பயிரில் மகசூல் எக்டேருக்கு முறையே, 1,899கிலோ 2,066 கிலோ என்ற அளவில் கிடைத்தது. களை கொத்தி கொண்டு களை எடுத்த பயிர் எக்டேருக்கு 1,827 கிலோ கொடுத்தது.

### களைகொல்லி அடித்ததற்கானச் செலவு :

முதல் கலவை:—

| | ரூபாய் |
|---|---|
| 1.5 லிட்டர் வீடோன் விலை ... ... | 30.00 |
| 3.5 லிட்டர் டோக் ஈ 25ன் விலை ... ... | 70.00 |
| மொத்தம் | 100.00 |

இரண்டாவது கலவை:—

| | |
|---|---|
| 1.5 லிட்டர் கிரமோக்ஸோன் ... ... | 60.00 |
| 0.75 கிலோ பெர்னுக்ஸோன் ... ... | 15.00 |
| மொத்தம் | 75.00 |

| | |
|---|---|
| களைக் கொத்தி கொண்டு களை எடுத்ததற்கு ஆன செலவு ரூபாய் | 240.00 |

களை கொல்லி உபயோகித்ததால் களை எடுக்க ஆகும் செலவில் ரூ. 145 முதல் 165 வரை மிச்சம். மகசூலும் 73 கிலோ முதல் 243 கிலோ வரை அதிகம் கிடைக்கிறது. ஆதலால் ராகிப் பயிரில் கையால் களை எடுப்பதைவிட களை கொல்லி கொண்டு களைகளை ஒழிப்பதே சிக்கனம்; இலாபத்தைத் தருவதும்கூட!

ஆகவே, ராகிப் பயிரில் களைகளை ஒழிக்க களைகொல்லிகளையே உபயோகியுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**

**தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,**
**கோயம்புத்தூர்.**

திறந்த அறை இருண்டு கிடந்தது. இரண்டு மூன்று முறை குற்றவாளிக்கு எச்சரிக்கை கொடுத்தும் வெளியே வரவில்லை. கதவு மறைவில் குற்றவாளி துப்பாக்கியோடு மறைந்து நிற்பான் என்று துப்பாக்கி ஏந்திய காவலர்கள் விளக்கொளியோடு, அறைக்குள் பாய்ந்தார்கள். அறைக்குள் யாருமில்லை. அறைக்குள் சென்று குற்றவாளியைக் காணாத காவலர்கள் அங்கு இன்னொரு கதவு பூட்டியிருக்கிறது என்று காவலர் வந்து சொல்ல ரவி திகைத்தார். அவருடைய சந்தேகக்கண் மேகநாதன் மனைவி மரகதத்தையும் அவள் பின்னால் நின்ற வேலையாள் மாரிசாமியையும் உற்றுப் பார்த்தது.

''மாரிசாமி, அந்தச் சாவிக் கொத்தை சப் இன்ஸ்பெக்டரிடம் கொடு. இந்த பங்களாவையே அவர்கள் சோதனை செய்யட்டும்'' என்று மாரிசாமிக்கு உத்தரவிட்ட மரகதம் உள்ளே சென்றுவிட்டாள். மாரிசாமி தன்னிடமிருந்த சாவிக்கொத்தை சப்-இன்ஸ்பெக்டர் ரவியிடம் சிரித்துக் கொண்டு கொடுத்தான். ரவி சாவிக்கொத்தை மாரிசாமியிடமிருந்து வாங்கினார். மாரிசாமியும் உள்ளே சென்று விட்டான். ரவி வாங்கிய சாவிக் கொத்தை, தன்னுடன் வந்த காவலர்களிடம் கொடுத்து. பங்களாவைச் சோதனையிடச் சொன்னார்.

மயங்கிக் கிடந்த மணமக்களை மருத்துவ மனையில் பார்க்கக் காரில் பறந்து சென்றார் ரவி. மணமக்களைப் பரிசோதித்த டாக்டர்களைப் பார்த்தார். அவர்கள் கொடுத்த குறிப்புப்படி மணமகளுக்குப் பலமான நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மூளை நரம்புகளும் முறுக்கேறியிருக்கின்றன என்று தெரிய வந்தது. மணமக்களை அதற்கான சிறப்பு மருத்துவரிடம் அனுப்பச் சொல்லிவிட்டு, கோவையிலுள்ள மேகநாதனைச் சந்திக்கக் காரில் புறப்பட்டார். மேகநாதனும் காரில் வந்து கொண்டிருந்தார். மேகநாதனின் காரை நிறுத்தி அவரைக் கோவைக்கே திரும்ப அழைத்துப் போனார். ரவியின் காரை மேகநாதனின் கார் பின் தொடர்ந்து சென்றது. மேகநாதன் வீட்டில் ரவியின் கார் நின்றது. மேகநாதனும் அவர் காரிலிருந்து இறங்கினார். அவரைப் பின்தொடர்ந்து அவர் தாய் மங்களமும் இறங்கினாள்.

மேகநாதனின் பார்வையாளர் அறையில் ரவியும் மேகநாதனும் உட்கார்ந்தார்கள்.



# நிழல் 7

பட்டுக்கோட்டை குமாரவேல்



''என்ன மிஸ்டர் மேகநாதன்?'' சப்-இன்ஸ்பெக்டர் ரவியின் அதிகாரமான அந்தக் கேள்வியில் பல அர்த்தங்கள் இருந்தன. அந்த பங்களாவில் நடந்து வரும் கொலைகளுக்கு நீதான் உடந்தை என்று மீண்டும் மேகநாதனைக் குற்றம் சாட்டுவது போன்று இருந்தது.

''உங்கள் மனைவி''......என்று பேச்சைத் தொடர்ந்தார் ரவி.

மேகநாதன் அதைக் கேட்டுத் திகைத்தார்.

''நேற்று உங்கள் பங்களாவிற்கு வந்திருந்த மணமக்களைக் கொலை செய்ய முயன்றது உங்கள் மனைவி மரகதம்தான் என நான் முடிவு செய்கிறேன். ஆனால் கையும் களவுமாக உங்கள் மனைவி மரகதத்தைக் கைது செய்ய முடியவில்லை.''

''குற்றவாளி யார் என்று தெரிந்து கொள்ளாமல், என்னையும் என் மரகதத்தையும் குற்றவாளி என்று முடிவு செய்வது சட்டப்படி சரியல்ல. அதிலும் ஊட்டியில் இருக்கும் என் பங்களாவில் நான் இரவில் தங்குவது கூடக் கிடையாது. ஆகையால் எந்த வகையிலும் நான் குற்றவாளி அல்ல இன்ஸ்பெக்டர்; நான் குற்றவாளி அல்ல.'' உணர்ச்சி வயப்பட்டு மேகநாதன் பதில் சொன்னார்.

''கொலை நடந்த பங்களா உங்களுடையது.''

''உண்மை, மறுக்கவில்லை.''

''கொலை செய்ய முயன்ற பெண் உங்கள் மனைவி.''

''என் மனைவியா! என்னால் நம்ப முடியவில்லை. குற்றம் செய்ய முயன்றவர் யாராக இருந்தாலும் நீங்கள் உடனே கைது செய்திருக்கலாமே.?

''மாயமானைப்போல உங்கள் மனைவி என் முன்னால் வேறொரு பெண்ணாக வந்து நின்றார்கள். அதனால் கைது செய்ய முடியவில்லை. ஆனால் உங்கள் பங்களாவில் இருந்து எங்கும் போக முடியாதபடி காவல் வைத்திருக்கிறேன். ஹவுஸ் அரஸ்ட் செய்திருக்கிறேன்.''

''மாயமான் என்றால்?''

''நான் கைது செய்ய முயன்ற பெண்ணும் உங்கள் மனைவியும் ஒரே உருவம். அவள் என்னிடம் இருந்து தப்பி மாயமாய்மறைந்து கொண்டாலும் அதே பங்களாவில்தான் இருக்கிறாள்.''

என் மனைவி மரகதத்தைப் போல சாயல் உள்ள பெண் என் பங்களாவில் மறைந்து கொண்டாளா! இதைக்கேட்டு ஆச்சரியப் படுகிறேன். அதிர்ச்சி அடைகிறேன் இன்ஸ்பெக்டர். நீங்கள் சொன்ன கொலை முயற்சிக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. மிஸ்டர் ரவி. என்னை நம்புங்கள்.'' மேகநாதன் உடல் நடுங்க உள்ளம் துடிக்கச் சொன்னார்.

''இந்தக் கொலைக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் இதே பங்களாவில் இதற்கு முன் நடந்த கொலைகள் அத்தனையும் உங்கள் திட்டப்படி நடந்தது தானே?''

''நான் எதற்காகக் கொலை செய்ய முயற்சிக்க வேண்டும்? என்னிடம் செல்வமில்லையா? செல்வாக்கில்லையா?''

''இரண்டும் இருப்பதால்தான் கொலை செய்வதை நீங்கள் ஒரு கலையாகக் கொண்டிருக்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.''

''இல்லை, இன்ஸ்பெக்டர் இல்லை. நான் கொலைகாரனில்லை. கொலை செய்யும் கலை எனக்கோ என் குடும்பத்திற்கோ எந்த நாளிலும் இருந்ததில்லை.''

''குற்றம் புரிந்தவர்களின் மனம் அவர்களைக் குற்றவாளி என்று சுட்டிக் காட்டினாலும் அவர்கள் தாங்கள் செய்தது குற்றம் தான் என்று ஒப்புக் கொள்வதில்லை. அதிலும் நீங்கள் பணக்காரர், செல்வாக்கு மிகுந்தவர்.''...

''பணத்தையும் செல்வாக்கையும் பணம் சம்பாதிப்பதில் நான் பயன்படுத்தி இருக்கிறேனே தவிர குற்றம் செய்யவோ செய்த குற்றத்தை மறைக்கவோ முயன்றதில்லை.''

''நடந்த கொலைகளை நீங்கள் மறைத்திருந்தாலும் இப்போது நடந்த கொலை முயற்சி உங்கள் திட்டப்படி நடந்தது என்று நான்

குற்றம் சாட்டுகிறேன். மணமகன் விநாயகம் குளியலறையில் பிணமானது போல உங்கள் பங்களாவில் பல கொலைகள் இதற்கு முன் நடந்திருக்கிறது என்று விசாரணையிலே தெரிய வந்திருக்கிறது. தொடர்ந்து பல கொலைகளை ஒரே இடத்தில் செய்த குற்றவாளியைக் கண்டு பிடிக்க நானே திட்டமிட்டேன்.''

எனக்குத் துணையாகத் துப்பறியும் காவல் அதிகாரிகளைக் கொண்டு வடநாட்டு மார்வாடி திருமணக் கோஷ்டி ஒன்றைத் தயார் செய்தேன். மணமக்களாக அங்கு வந்து மரகதத்தின் கொலை முயற்சியிலிருந்து தப்பித்தவர்கள், குற்ற இலக்காவிற்காக நடிக்க வந்த நடிகர்கள். அவர்களின் முதல் இரவுக்காகத்தான் உங்கள் பங்களாவையே எடுத்து மாறுவேஷத்திலே காத்திருந்தேன்.''

''உங்கள் வேலையாள் மாரிசாமி இன்ஸ்பெக்டர் புண்ணியகோடியிடம் சொன்னபடி முதலில் நள்ளிரவில் மின் விளக்கு அணைந்தது. திடீரென்று அங்கு பேய்க் காற்று வீசியது. அதைத் தொடர்ந்து மயக்கும் மணம் பரவியது. மூச்சுத் திணறியது. என்னை மறக்கும் மயக்க நிலை. எந்த மயக்கத்தையும் சமாளிக்கும் தற்காப்பு முறைகள் எனக்குத் தெரிந்திருந்ததால் சமாளித்து அந்த இருட்டில் மறைந்திருந்தேன்.''

''வழக்கம்போல மணமகளைக் கொலை செய்ய வந்த உங்கள் மனைவி மரகதத்தைக் கையும் களவுமாகப் பிடித்துப் போராடிக் கைது செய்திருக்கிறேன்.''

''மாயமாகுக மரகதம் பட்டதால் அவளை ஹவுஸ் அரஸ்ட் செய்திருப்பதாகச் சொன்னீர்களே?''

உங்கள் மன நிலை அறிய நான் திட்டமிட்டுச் சொன்ன பொய். இப்பொழுது சொல்லுங்கள். உங்கள் பங்களாவில் நடந்திருக்கும் கொலைகளுக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லையென்றால், உங்கள் மனைவி இந்தக் கொலைகளை ஏன் செய்ய வேண்டும்?''

''ஒரு பெண்ணை வாழ வைக்க வேண்டிய பெண் எதற்காக இந்தக் கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்? தங்கள் மனைவி இதுவரை செய்ததாகச் சொல்லும் கொலைகளுக்கும் நேற்று நடந்த கொலை முயற்சிக்கும் யார் காரணம்? யார் போட்ட திட்டம்? உண்மையை மறைக்காமல் சொல்லுங்கள்.'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி கண்டிப்பான குரலில் கேட்டார்.

''சொல்கிறேன் இன்ஸ்பெக்டர். என் மனைவிதான் இங்கு நடந்திருககும் கொலைகளுக்கெல்லாம் காரணம் என்று எனக்கு உண்மையாகவே தெரியாது..... கொலை செய்யும் முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்தபோது கைது செய்திருக்கிறீர்கள். அவள் கொலைக் குற்றவாளியாகக் கைது செய்யப்பட்டதைப் பார்த்து நானே அதிர்ச்சி யடைகிறேன். நான் சொல்லும் வாக்குமூலத்தைக் கொண்டு என் பங்களாவில் நடக்கும் சம்பவங்கள் கொலையா தற்கொலையா? நடக்கும் கொலைகளுக்கு யார் காரணம் என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.'' மேகநாதன் மனம் நொந்துபோய் சொன்னார்.

''அப்படியென்றால், விநாயகத்தைக் கொலை செய்தவன் சந்திராவைக் காதலித்த சேகர்தான் என்று நீங்கள் முன்பு வாக்குமூலம் கொடுத்தது?''

''சேகர் சந்திராவைக் காதலித்தது உண்மை. காதலில் தோல்வி கண்ட சேகர் அவன் அடைய முடியாத சந்திராவை விநாயகம் அடையக் கூடாது என்று கொலை செய்திருக்கலாம் என்ற சந்தேகம்தான்.''

''ஆதாரமில்லாமல் ஒருவர் மீது கொலைக் குற்றம் சாட்டுவது பெரிய குற்றம். இது உங்களுக்குத் தெரியாதா?''

''ஒருவர் மீது மற்றொருவர் ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டுவது தவறுதான். ஒப்புக் கொள்கிறேன்.''

''ஆனால் உங்கள் மனைவியை மட்டும் கொலைகாரி என்று குற்றம் சாட்ட உங்கள் மனம் இடம் தரவில்லை. அப்படித்தானே?''

''நடந்த நிகழ்ச்சிகளை என் கண்ணால் பார்க்காததால் என் மனம் என் மனைவி மீது குற்றம் சொல்ல மறுத்து விட்டது. அவள் கொலைகாரிதான் என்று கையும் களவுமாக நீங்கள் கைது செய்த பிறகு அவள் குற்றவாளி அல்ல என்று நான் எப்படிச் சொல்ல முடியும்?''

''உங்கள் மனைவியைக் குற்றவாளி என்று நீங்கள் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் உங்கள் மனைவி செய்த கொலைகளுக்கும், செய்யும் கொலை முயற்சிகளுக்கும் நீங்கள் உடந்தையாக இருக்கிறீர்கள் என்று நான் குற்றம்



சாட்டுகிறேன். உங்களையும் கைது செய்கிறேன். ஹெட் கான்ஸ்டேபிள்! மிஸ்டர் மேகநாதனைக் கைது செய்யுங்கள்.''

மேகநாதன் சிலையாக நின்றார். ''மேகநாதனைக் கைது செய்யாதீர்கள். மேகநாதனைக் கைது செய்யாதீர்கள். அவன் மரகதத்தை மனைவியாக ஏற்றுக் கொண்டதைத் தவிர வேறு எந்தக் குற்றமும் செய்யவில்லை. அவன் குற்றவாளியல்ல. மரகதம்தான் குற்றவாளி. அவள்தான் இத்தனை கொலைகளுக்குக் காரணமாக இருக்கும் சூன்யக்காரி.'' மேகநாதன் காரிலிருந்து இறங்கிய வயதான மூதாட்டி பதறித் துடித்துச் சொன்னாள்.

''யார் நீங்கள்?'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி கேட்டார்.

நான் மரகதத்தின் மாமியார்-மேகநாதனின் தாய். மரகதம் என் அண்ணன் மகள். அவள் அழகில் மயங்கி அவள் அந்தஸ்திற்கு ஆசைப்பட்டு, அவளை ஏணிப்படியாக்கி வாழ்க்கையில் உயரலாமென்று திருமணம் செய்து கொண்டான் என் மகன் மேகநாதன்.''

''அப்படியானால் மரகதம்தான் கொலைகாரி. அவள்தான் பல கொலைகளுக்கும் காரணமாக இருந்த சூன்யக்காரி என்று நீங்கள் எப்படி நிரூபிக்க முடியும்?''

''மரகதத்தைக் கொலைகாரி என்று என்னால் நிரூபிக்க முடியாவிட்டாலும், அவள் சூன்யக்காரியாகத்தானிருக்க முடியுமென்று என்னால் நிரூபிக்க முடியும்.''

உடல் நடுக்கத்தோடு நின்ற அந்த மூதாட்டியைப் பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னார் சப்-இன்ஸ்பெக்டர்.

மூதாட்டி பேசத் தொடங்கினார். ''மரகதம் ஹைஸ்கூல்லே

படிக்கிற போது, எங்க ஆதரவிலே எங்க வீட்டிலேயே முத்துங்கற பையனும் இருந்து படிச்சுக்கிட்டிருந்தான். அவன் எங்களுக்கு எட்டத்து உறவு. ஆனு ஏழைப் பையன். விடுமுறை நாள்லே, ஓய்வு நேரங்கள்ளே ரெண்டு பேரும் கேரம் விளையாடுவாங்க. சின்னப் பிள்ளைங்க விளையாடுதுன்னு நாங்களும் அதை விகல்பமா எடுத்துக்கலே. பொழுது போக்கா விளையாடத் தொடங்கின கேரம் விளையாட்டு காலப் போக்கிலே காதல் விளையாட்டாயிட்டுது. இவங்க ரகசியக் காதலை ஒரு நாள் என் கண்ணுலே பார்த்துட்டேன்.

விளையாட்டு வினையாயிட்டுதேன்னு நடந்ததை வெளியிலே சொல்லாம உடனே மரகதத்துக்குத் திருமணம் செய்துடனும்னு என் சகோதரர்கிட்டே சொன்னேன். மரகதத்தை என் மகன் மேக நாதனுக்கே திருமணம் செய்து வைக்க முடிவு செய்தோம். எங்க முடிவு தெரிஞ்ச மரகதமும் முத்துவும் எங்களுக்குத் தெரியாம ஊரை விட்டு ஓடிவிடத் திட்டம் போட்டாங்க. ஆமா, ஆமா அந்த முத்து மரகதத்துக்கு எழுதிய காதல் கடிதம் எங்கிட்டே கிடைச்சுட்டுது.''

''ஓ கோ!....அதைத் தடுத்து நிறுத்திட்டிங்க!'' சப்-இன்ஸ்பெக்டர் ரவி குறுக்கிட்டுப் பேசினுர்.

''ஆமா. அந்த முத்து வீட்டுக்கு வந்ததும் கதவைச் சாத்திட்டு மரகதத்தை மறந்திடுன்னு சொல்லி அவனை அடிச்சுக் கண்டிச்சோம். உன்னை ஆதரிச்ச குடும்பத்துக்குத் துரோகம் செயலாமான்னு திட்டினேன். திருட்டுக் குற்றம் சுமத்தி போலீஸ்லே பிடிச்சுக் கொடுத்திடுவோம்னு பயமுறுத்திஞேம். பேசிக் கொண்டிருந்த மூதாட்டிக்கு இருமல் வந்து விட்டது. களைப்பைப் போக்கிக் கொண்டு மறுபடியும் பேச ஆரம்பித்தாள்.

''ஒரு அறையிலே அவனைப் போட்டுப் பூட்டி ஆகாரம் கொடுக்காமக் கொடுமைப்படுத்திஞேம்.''

''முத்து மரகதத்தை மறந்துட்டானு! இல்லே'' சன்-இன்ஸ்பெக்டர் மூதாட்டியின் பேச்சை மறித்துக் கேட்டார்.

''மரகதத்தை அவனுலே மறக்க முடியாதுன்னு சொல்லிட்டான். அவளைத்தான் கல்யாணம் செய்துப்பேன்னு பிடிவாதம் பிடிச்சான்.''



''மரகதம் என்ன சொன்னு? முத்துவை நீங்க கொடுமைப்படுத்தியது அவளுக்குத் தெரியுமா?''

''ஒரே வீட்டுக்குள்ளே இருக்கும் போது தெரியாமலா போகும்? அவளும் அவனை மறக்க முடியாதுன்னு பிடிவாதம் பிடிச்சா. ஆகாரம் தண்ணி குடிக்காமப் பட்டினி கிடந்தா.''

''அப்புறம் என்னநடந்தது?'' இன்ஸ்பெக்டர் பேச்சைத் தொடர்ந்தார்.

''இனிமேல் மரகதத்தை இந்த வீட்டிலே வைச்சிருக்கக் கூடாதுன்னு என் அண்ணன் ஊருக்கு அவளை அனுப்பி வைச்சுட்டேன். அவர் என் மகன் மேகநாதன் இருந்த கிராமத்துக்கு அனுப்பி வைச்சாரு.''

''பிரிவு மறதியை உண்டாக்கும்னு நினைச்சிங்க. அப்படித்தானே?''

''ஆமா, ஆனு அது திடீருன்னு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்துட்டுது. அன்று பொழுது விடிஞ்சு அந்த அறையைத் திறந்தோம்.''

''என்ன நடந்தது?' ஆவலோடு சன்-இன்ஸ்பெக்டர் கேட்டார்.

''அந்தப்பையன் முத்து நாங்க பூட்டி வைச்சிருந்த அறையிலேயே தூக்குப் போட்டுத் தொங்கிட்டான்.''

''இந்த விபரம் ஊருக்குத் தெரியாதா?''

''தெரியாது. விஷக்காய்ச்சலுக்கு பையன் பலியாயிட்டான்னு உண்மையை மறச்சு அடக்கம் செய்துட்டோம்.''

''அந்த முத்துவோட உற்ருர் உறவினர் யாருமே இல்லையா?''

''அவன்தான் அனுதையாச்சே'

''இந்த விபரம் மரகதத்துக்கு மறுபடி தெரிஞ்சுதா? இல்லையா?''

''ஒரு வருஷத்துக்குப் பிறகு மரகதம் நடந்ததையெல்லாம் மறந்திருப்பான்னு வீட்டுக்கு அழைச்சுட்டு வந்து மறுபடியும் படிக்க அனுப்பினேன். பிரம்மை பிடிச்சது போல அங்குமிங்குமா திகைச்சுத் திகைச்சு நின்னு. நடந்தா. நடந்தவைகளை நினைவு படுத்திப் பாக்கறதுபோலப் புருவங்களை நெறிச்சுக் கண்களைச் சுருக்கிப் பார்த்தா. எனக்கு உள்ளூர பயம். இனிமே படிப்பு ஓடாதுன்னு முடிவு செய்து திருமணத்தை முடித்துவிட என் அண்ணன் மீண்டும், நல்ல வரன்களைத் தேடினுர்.''

''என் அண்ணன் லட்சாதிபதி. அவன் சொத்துக்கெல்லாம் வாரிசு மரகதம்தான்னு தெரிஞ்சு வந்த எத்தனையோ நல்ல வரன்களையெல்லாம் வேண்டாம்னு மறுத்திட்டா. நானும் என் அண்ணனும் பொறுமை இழந்திட்டோம்.''

''எனக்குத் திருமணமே வேண்டாம். நான் முத்துவைத்தான் திருமணம் செய்துப்பேன்னு பித்துப் பிடிச்சவ போலப் பிடிவாதம் பிடிச்சா. செத்துப் போனவனை நினைச்சுச் சீரழிஞ்சு போகாதேன்னு கெஞ்சினேன். கொஞ்சினேன். கண்டிச்சேன்.''

''மரகதம் கேட்கவே இல்லே. எனக்கு ஆத்திரம் வந்திட்டுது. எனக்கு வந்த கோபத்திலே என்னையே மறந்து, அவளை வளர்த்த பாசத்தை மறந்து அடிச்சேன். உதைச்சேன். அவள் பிடிவாதத்தை மாத்திக்கவே இல்லே. நான் செத்தாலும் அந்த முத்துவைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு பல பேருக்கு முன்னுலே என்னை எதிர்த்தும் பேச ஆரம்பிச்சுட்டா.

(தொடரும்)

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால் —செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது— இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# அடிமையின் விடுதலை!



தர்மத்துக்கும், நியாயத்துக்கும் கட்டுப்பட்ட அந்த விவசாயிக்கு இப்போது வயது எழுபத்தைந்து! நான் இன்று அவரைப் பார்த்த போது அவர் முகத்தில் ஒரு புது ஒளி பிரதிபலிப்பதைக் கண்டேன். நேற்று, முந்தா நாள், போன மாதம், போன வருடம், பத்து வருடங்கள் முன்பு நான் கண்டிராத ஒளி அவர் முகத்தில் எப்படி இப்படித் திடீரென்று வந்துவிட்டது? வெளியே சிரிக்கிறவன் எல்லாம் உள்ளூற சந்தோஷமாகவே இருக்கிறான் என்று சொல்ல முடியுமா? ஆனால் உண்மை உவகையில் உள்ளமே நிறைந்து பூரிக்கும்போது, கண்களில் அந்த நிறைவு ஒரு ஒளிப் பிழம்பாகப் பிரகாசிக்கிறதே ஏன்?

என்னுடைய ஆர்வம் என்னை மீறிப் போகவே நான் அவர் அருகே போய் உட்கார்ந்தேன். கிழவர் வெற்றிலை பாக்குத் தட்டை என் முன் தள்ளி வைத்தார்.

''என்னப்பா சௌக்கியமெல்லாம் எப்படி?''

''என் உடம்பு என்னிக்குமே வாடினதில்லை ஐயா. ஒன்று கேட்டா அதை என் யசமான் தம்முடைய நன்மைக்காகவும், சௌகரியத்துக்காகவும்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் என் மனசுதான் இத்தனை வருஷமா நெருப்புலே தவிக்கிற புழு மாதிரி தவிச்சுட்டே இருந்தது. இன்னிக்குத்தான் அடுப்பிலேந்து விடுதலை கிடைச்சுது''.

''நீ என்னப்பா சொல்றே. எனக்கு ஒண்ணுமே புரியலே.... அடுப்புங்கறே, புழுங்கறே, விடுதலைங்கறே....கொஞ்சம் விவரமாகச் சொல்லேன்....''

''உங்களுக்குப் பொறுமை இருக்கா ஐயா... என் கதை பூரா சொல்லியாகணும்... நான் எப்படி அடுப்பிலே விழுந்தேன் என்பதைச் சொன்னாத்தான் உங்களாலே புரிஞ்சுக்க முடியும்.''

''சொல்லு, கேட்கிறேன்.''

கிழவர் சொன்னார் :

''இப்போ எனக்கு வயசு சரியா எழுபத்தஞ்சு, அம்பது வருசம் முன்னே என் தகப்பனாரோடே நான் விவசாயத்திலே இருந்தேன். நான்தான் மூத்த பிள்ளை. கலியாணம் செய்ஞ்சு கொடுக்க மூணு தங்கச்சிங்க. அம்மாவுக்கு க்ஷயம். ஒரு வருஷம் பூமி ஏமாத்தினா, மூணு வருஷம் பட்டினி கிடக்கிற நிலை.

'' நிலத்தை அடமானமா வைச்சு அப்பா வாங்கியிருந்த கடனைத் திருப்பிக் கொடுக்க முடியலை. வட்டி நாளுக்கு நாள் விஷமா ஏறி ஏறி, நிலத்தையே முழுங்கப் பார்த்துட்டிருந்தது. அந்த நிலம் போனா எங்க வாழ்வே போயிடும் என்கிற நிலை. என்ன செய்யறதுன்னு புரியாத குழப்பம்.

''அதைத் தீர்த்து வைக்க கிராமத்துப் பணக்காரர் ஒருவர் முன் வந்தார். எங்க கடனையெல்லாம் தீர்த்து வைக்கிறதாகச் சொன்னார். என் அப்பாவுக்கு ஒரே குஷி. பத்திரத்திலே அவர் காட்டின இடத்திலே கையெழுத் போடச் சொன்னார். அப்பாவும் நானும் போட்டோம். என்ன எழுதியிருக்குண்ணு புரிஞ்சுக்க எங்களுக்குப் படிக்கத் தெரிஞ்சாத்தானே? நான் முட்டாள், படிக்கத் தெரிஞ்சவங்களைக் கூட்டிட்டுப் போயிருக்கணும்.''

''என்ன எழுதியிருந்தது பத்திரத்திலே?'' என்று கேட்டேன்.

''சொல்றேன்... அதற்கு முன்னாடி மத்ததையும் சொல்ல வேண்டாம்?''

கிழவர் தொடர்ந்தார் .....

''அம்மா க்ஷயத்திலே செத்துப் போனாள். அவளை எரிக்கப் பணம் தேவையாக இருந்தது. அந்தப் பணக்காரர் மேலும் கடன் கொடுத்தார். மறுபடியும் கையெழுத்து வாங்கிக் கொண்டார்.

''அப்புறம் ஆறு மாசத்திலே கிராமத்திலே ஒரு பையன் கிடைச்சான். என்னுடைய முதல் தங்கையைக் கல்யாணம் செய்து கொடுக்க நினைச்சு கேட்ட உடனே கடன் கொடுக்கிற புண்ணியவானைப் போய்ப் பார்த்தேன். அவர் சொன்னது என் தலையில் சம்மட்டியால் அடிக்கிற மாதிரி இருந்தது.''

''உங்க நிலத்தோடே மதிப்பு இன்னித் தேதியிலே மூவாயிரம் ரூபாய்... போன வருசம் ரெண்டாயிரத்து ஐநூறு ரூபாய் கொடுத்தேன். உன் அம்மா செத்தப்போ, நீ நானூறு ரூபா வாங்கினே. வட்டியைச் சேர்த்தா, நீ கொடுக்க வேண்டியது மூவாயிரத்து முன்னூத்து அறுபது ரூபா...இப்போ எவ்வளவு வேணும்?' என்றார் எசமான்.

''கலியாணச் செலவுக்கு ஆயிரம் ரூபாய்....''

# வெற்றியை நோக்கி....!



எல்லாரும்
இன்புற்றிருக்கச்
செயல்படுத்தும்
திட்டங்கள்
வெற்றி பெற்றிட
வலுமிக்க
அடித்தளம் அமைய

உதவுவதே
அளவான குடும்பம்.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

— குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.

''அப்போ கணக்கு நாலாயிரத்து முன்னூத்து அறுபது ரூபா ஆகும்... அதாவது நிலத்துக்கு மேலே ஆயிரத்து முன்னூத்து அறுபது ரூபா...''

''அப்படியா?''

''ஆமாம், நீயே கணக்கைப் பார்த்துக்கோ...''

''நீங்க சொன்னா சரித்தான்.''

''கவலைப் படாதே... இதை எப்படித் திருப்பித் தர்றதுன்னு தானே பார்க்கிறே? உன் நிலத்திலேயே நீ வேலை செய்... மாசாமாசம் பதினைஞ்சு ரூபாய் சம்பளம் தரேன். அதிலேந்து கடனை அடைச்சுடு... உன் அப்பாவும் வேலை செய்யலாம் என்றார்.''

''நான் யோசிக்கவில்லை. கடன் வாங்கினால் அதைத் திருப்பிக் கொடுக்கணும். அதுதான் தர்மம். வியர்வையைச் சிந்தித் தான் அதைச் செய்ய முடியும். இந்த மாதிரி இன்னொருவர் எங்க கிராமத்திலேயே செய்வதும் எனக்குத் தெரியும்.''

''பத்திரத்திலே கையெழுத்துப் போட்டு ஆயிரம் ரூபாயுடன் வீட்டுக்கு ஓடினேன். அப்பாகிட்டே, தங்கையின் கலியாணமான பிறகு விஷயத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்... அவர் அடிபட்ட மரமாகச் சாய்ந்து விட்டார்.''

''டேய் இனிமே இந்தக் குடும்பமே அவருக்கு அடிமைடா'' என்றார் என் அப்பா.

''நமக்கு அவர் சம்பளம் கொடுக்கிறார் அப்பா!'' என்றேன்.



# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி யின் ரொக்க சர்ட்டிபிகேட்டுகளின் (CASH CERTIFICATES) மூலம் உங்களுடைய முதலீடுகளுக்கு 17.75% வரை வட்டி பெறுங்கள்



| முதலில் செலுத்த வேண்டிய தொகை | ரூ 100/- | ரூ 250/- | ரூ 500/- | ரூ 1000/- |
|---|---|---|---|---|
| உரிய காலத்திற்குப் பிறகு பெறப் போகும் தொகை | ரூ | ரூ | ரூ | ரூ |
| 36 மாதங்களுக்குப் பிறகு | 131.80 | 329.50 | 659.00 | 1318.00 |
| 48 ,, ,, | 144.60 | 361.50 | 723.00 | 1446.00 |
| 60 ,, ,, | 158.50 | 396.25 | 792.50 | 1585.00 |
| 61 ,, ,, | 168.00 | 420.00 | 840.00 | 1680.00 |
| 72 ,, ,, | 184.50 | 461.25 | 922.50 | 1845.00 |
| 84 ,, ,, | 204.30 | 510.75 | 1021.50 | 2043.00 |
| 96 ,, ,, | 226.30 | 565.75 | 1131.50 | 2263.00 |
| 108 ,, ,, | 250.60 | 626.50 | 1253.00 | 2506.00 |
| 120 ,, ,, | 277.50 | 693.75 | 1387.50 | 2775.00 |

சிறு முதலீடு செய்வோர் தேவைக்கேற்ற எமது திட்டங்கள் :

| உரிய காலத்திற்குப் பிறகு பெறப் போகும் தொகை | ரூ 25/- | ரூ 50/- | ரூ 100/- | ரூ 500/- | ரூ 1000/- |
|---|---|---|---|---|---|
| முதலில் செலுத்த வேண்டிய தொகை | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 36 மாதங்களில் முடியும் டெபாசிட்டுகள் | 18.97 | 37.94 | 75.88 | 379.40 | 758.80 |
| 48 ,, ,, | 17.29 | 34.58 | 69.16 | 345.80 | 691.60 |
| 60 ,, ,, | 15.77 | 31.54 | 63.08 | 315.40 | 630.80 |

TNSC BANK

முழு விவரங்களுக்கு எங்களை அல்லது உங்கள் அருகாமையிலுள்ள எங்கள் கிளைகளை அணுகவும்

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**
379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-600001
தந்தி : "URBANK" போன் : 20367 (3 லைன்கள்) டெலக்ஸ் : MS 7225

TNSC-124/76

''டேய் முட்டாள், அதிலேயிருந்து என்னத்தைடா திருப்பிக் கொடுக்க முடியும்? வட்டியைக் கூட ஈடு செய்ய முடியாதே!''

''பின் என்ன செய்யறது. தங்கச்சி புருசன் வீடு போக வேண்டாம்?'' என்றேன்.

''அப்பா அன்றிலிருந்து சரியாச்சாப்பிடலே; சரியாத் தூங்கலே. ஆறு மாசத்திலே அவர் அம்மாவைத் தேடிப் போய்விட்டார்.

''இப்போது இரண்டு தங்கைகளை நான் காப்பாத்தியாக வேண்டும். சம்பளம் பதினைஞ்சிலிருந்து இருபதாக ஏறித்து. எசமானன் எங்களுக்குப் போட்ட சேர்த்துச் சில்லவையும் கணக்கிலே எழுதிக் கொண்டார்.

''அப்புறம் நடந்ததெல்லாம் தொடர்கதைதான்.''

''ரெண்டாம் தங்கைக்குக் கலியாணம். மூணும் தங்கைக்குக் கலியாணம். மேலும் ரெண்டாயிரம் கடன். வாழ்நாள் பூராவும் அவருக்கு, அவர் சொன்ன வேலையெல்லாம் செஞ்சாத்தான் கடன் ஒழியும்னு தெரிஞ்சுது. இது தெய்வத்தின் கட்டளைன்னு செஞ்சேன்.

''எனக்குக் கலியாணமாச்சு. பெண்டாட்டியும் என் கூட வேலை செய்ஞ்சா. ரெண்டு பேருமா சம்பாதிச்சா சீக்கிரம் கடன் தீர்ந்துவிடுமேன்னு நான் நினைச்சேன்.

''ஆனா நான் நினைச்சது வெறும் சொப்பனம்தான்னு தெரிஞ்சது. எங்க சம்பளம் வட்டியைக் கூடத் தொடவில்லை. சாப்பாட்டுச் சிலவு வேறு, மேலே மேலே ஏறிட்டே போச்சு.

''எட்டு வருஷத்துக்கு அப்புறமும் இதே கதைதான். என்னுடைய ஏழு வயசுப் பையன் ரெண்டாம் கிளாஸ் படிச்சுட்டிருந்தான். ஒரு நாள் அவனை அழைச்சு வரச் சொன்னார் எசமானர்.''

''கடனைத் தீர்க்க உன் பையனையும் அனுப்பு'' என்றார்.

''அவன் படிக்கணுமே''ன்னு சொன்னேன்.

''உன் குடும்பமே என்கிட்டே வேலை செய்தாகணும்'' என்றார்.

''நான் முடியாதுன்னேன். உடனே அவர் பத்திரத்தைக் காட்டினார். அவருடைய குமாஸ்தா படிச்சுக் காட்டினார். கடன் தீருகிற வரையில் என் குடும்பம் அவருக்காக உழைக்க வேண்டும் என்று இருந்தது. அந்தப் பத்திரத்தில் தான் நான் கையெழுத்துப்போட்டிருந்தேன். என் கழுத்தில் விழுந்த சுருக்கும் அதுவேதான்.

''1947-ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் வெளியே போனான். மகாத்மா காந்தியும், நேருவும் தேசத்துக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தாங்க. ஆனா எனக்கு?

''தேசத்தின் அடிமைத் தளை போயிட்டுது. ஆனா என் அடிமைத் தளை? எனக்கு யார் விடுதலை வாங்கித் தருவாங்க?

''உழைச்சு உழைச்சு, ரத்தத்தைச் சிந்திச் சிந்தி, ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் யசமானருடைய பிடியிலிருந்து விடுவிச்சுக்கலாம்னு நினைச்சேன். ஆனா முடியலே. பிடி, மேலே மேலே இரும்பா இறுகிக்கிட்டே வந்தது. என் குடும்பம் பெரிசாச்சு. எனக்குப் பெண் பிள்ளைகன்னு பிறந்தாங்க. கலியாணம், திருநாள்னு வந்தது. இதையெல்லாம் நிறுத்த முடியுமா, இல்லே விட முடியுமா?

''என் அப்பனைப் போல, என்னைப் போல, என்பிள்ளையைப் போல, அவனுடைய பிள்ளையும் எட்டு வயசில் வேலைக்குப் போனான். ஊர்ப் பிள்ளைங்களெல்லாம், நல்ல துணி கட்டி, நெத்திக்கு இட்டுக்கிட்டு, சிரிச்ச முகத்தோடே பள்ளிக்கூடம் போற போது, என் பேரன் நிலத்திலே களை பிடுங்கிக்கிட்டிருந்தான். என் வயித்தைப் பிடுங்கித் தின்னுச்சு.

''ஆனா என்ன செய்ய முடியும்? யசமானர் கடன் கொடுத்திருக்கிறாரே? அதைத் திருப்பிக் கொடுக்கணுமே. அதுதானே நியாயம், தர்மம். நான் தலைமறைவா ஓடலாம். ஆனா எங்கே எத்தனை நாளுக்குப் பெண்டாட்டி குழந்தைகளை விட்டிட்டு ஒளிஞ்சுப்பேன். அப்படியே ஒளிஞ்சுட்டிருந்தாலும் என் பிள்ளையைச் சும்மா விடுவாங்களா?

''இப்படித் தவிச்சுக் கொண்டிருக்கையில் திடீரென்று கிராம முன்சீப் ஓடி வந்தார். ரேடியோவிலே பிரதமர் இந்திரா காந்தியின் லட்சியங்களிலே ஒரு லட்சியமாக கொத்தடிமை முறையை ஒழிச்சுட்டதாகச் சொன்னார். நான் எசமானரைப் பார்க்க ஓடினேன். அவர் இளைஞர், இந்தக் காலத்து இலட்சிய யுவன், என்னை பார்த்ததும், 'வாப்பா, சர்க்காரே சொல்லிட்டாங்க. நான் உன்னை உனக்கே கொடுத்துடணும்னு; நிலத்தையும் கொடுத்துடணுமாம். கடனும் தீர்ந்து போச்சாம்'' என்றார். என்னால் நம்ப முடியவில்லை. அவர் தொடர்ந்து, ''இனி நம்ம தேசத்திலே கொத்தடிமை இல்லை. இந்திரா காந்தியின் லட்சியத்தைப் பூர்த்தி செய்யறது நம்முடைய கடமை. நான் இன்னிக்கே நிலத்தை உன் பெயருக்கு மாத்திட்டேன்'' என்றார்.

''எனக்கு நிலம் கிடைச்சது. நான், என் பிள்ளை, பேரன், எல்லோரும் சந்தோஷத்திலே மூணு நாள் தூங்கலே!

''அப்புறம் ஒரு அதிகாரி எங்கள் வீட்டுக்கு வந்தார். எங்க விவசாயத்துக்கு வேண்டிய நிதி உதவி, பையன்களுக்கு வேண்டிய பள்ளி வசதி, கடைசியாக தெரியுங்களா, வீடு கட்டிக் கொள்ள இடத்தை ஒதுக்கி, அதைக்கட்டிக் கொள்ளக் கடனும் வேறு! என் பேரப் பிள்ளைங்க விவசாயத்திலே உழைச்சா, குறைந்த பட்சக் கூலி வேறு தராங்க. இதெல்லாம் இப்போ எங்களுக்குக் கிடைச்சிருக்குன்னு அந்த அதிகாரி சொல்லிவிட்டு, எங்களுடைய விவரங்களையெல்லாம் எழுதி எடுத்துக்கிட்டு போனார்.

''இப்போ தெரியுதுங்களா 'ஏன் என் கண்ணிலே ஒளி இருக்கு? முகத்திலே சந்தோஷம் இருக்குன்னு?'' என்று அந்தக் கிழவர் கேட்டார்.

''இதுக்கு யார் காரணம்?'' என்று நான் கேட்டேன்.

''நம்ம தெய்வம் மந்திரி வந்திருக்காங்களே, அம்மா... நம்ம இந்திரா காந்தி... அவங்களோட லட்சியம் ஜெயிச்சிட்டுது... பாரத தேசத்திலே என்னைப் போல லட்சக் கணக்கான பேர் இந்தக் கொத்தடிமை முறையிலே தவிச்சுட்டிருந்தாங்க... அவங்களுக்கெல்லாம் விடுதலை கிடைச்சுட்டது''.

''ஆம். கிழவர் சொல்வது சரிதான். கொத்தடிமை எனும் அரக்கன் தீயில் கருகிவிட்டான். இருபது அம்சத் திட்டம் வெற்றிக்கும், சுபிட்சத்திற்கும் வழி காட்டுகிறது.''

[நன்றி : பத்திரிகைத் தகவல் அலுவலகம், சென்னை.]



# அடிமை விலங்கொடிப்போம்!

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் ஒன்றான கொத்தடிமை முறையை ஒழிப்பதில் தமிழ்நாட்டிலேயே சிறிய மாவட்டமாகிய நீலகிரி மாவட்டம் அரும்பெரும் சாதனைகள் நிறைவேற்றவிருக்கிறது.

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட 'பழங்குடி மக்கள் தாழ்த்தப்பட்டோர் நலக்குழு' நீலகிரியில் பழங்குடி மக்களாகிய பணியர்களிடம் அடிமை ஊழியம் நிலவுவதாகத் தெரிவித்தன் பேரில், பணியர்களின் அடிமை ஊழியத்தை ஒழிப்பதற்கென்று இப்பொழுது தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முக்கியமாக நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் பணியர் என்ற பழங்குடி மக்கள் சுமார் 5,000 பேர் வாழ்ந்து வருகின்றனர். மிகவும் பின்தங்கிய மக்களாகிய இவர்களை அங்கு விவசாயம் செய்யும் சிலர், அடிமை ஊழியர்களாகத் தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர் என்று தற்பொழுது தெரிகிறது. இந்த இக்கட்டான நிலையில் உள்ள பரம ஏழைகளாகிய பணியர்களை அடிமை ஊழியத்திலிருந்து விடுவிப்பதற்கும், அடிமை ஊழியத்தை அறவே ஒழிப்பதற்கும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் தற்போது தமிழ்நாடு அரசு பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

பணியர்களுக்கு என்று சுமார் 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படுமென்றும், அவர்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம் இன்னும் வீட்டு வசதிகள், விவசாயம் செய்வதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கொத்தடிமைத் தொழிலிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு மறுவாழ்விப்பு அளிப்பது சம்பந்தமான திட்டங்களை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்துவதற்காக அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

மத்திய தொழிலாளர் நல அமைச்சகச் செயலாளர் இக்குழுவின் தலைவராக இருப்பார். வேளாண்மைத்துறை, கிராம வளர்ச்சித் துறை, சமூகநலத் துறை, மத்திய உள்துறை அமைச்சகம், இத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட மற்ற துறைகள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

திட்ட அமல் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்வதற்காகச் சம்பந்தப்பட்ட கழகங்கள் துறைகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும், தலைமைச் செயலாளரைத் தலைவராகவும் கொண்ட மாநில மட்டக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என மாநிலங்களுக்கு யோசனை கூறப்பட்டது.

கொத்தடிமைத் தொழிலிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தொகுதியிலும் அதிகாரிகள் கொண்ட பிரிவு ஒன்றை ஏற்படுத்தும்படி மாநில அரசுகளிடம் யோசனை கூறப்பட்டுள்ளது.

கூட்டுறவுச்சங்கங்கள், வங்கிகள் காதி—கிராமத் தொழில்துறைகள், கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மைத்துறை ஆகியவற்றின் அலுவல்களை ஒருங்கிணைக்கும் பணியில் இச்செயல் பிரிவுகள் ஈடுபடும்.

விடுவிக்கப்பட்ட அடிமை ஊழியர்களுக்கு விரைவாக மறுவாழ்வு அளிப்பது, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஆகியவை பற்றிய விவரங்களை உடனடியாக அளிக்குமாறு மத்திய அரசு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட அடிமை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தின் மொத் [illegible] ஒதுக்கப்பட்ட தப் பரப்பு, வி[illegible] மூலப் பொருட்களின் அளவு ஆகியவை பற்றியும், குழந்தைகளுக்கு இலவச கல்வி, இலவச மருத்துவம் போன்ற சமூகப் பணிகளை அளிப்பதற்கான நிருவாக ஏற்பாடுகளைப் பற்றியும் விவரங்கள் அளிக்குமாறு மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வீட்டு மனைகள், விவசாயத்திற்கான நிலங்கள் ஆகியவற்றை ஒதுக்குவது பற்றியும், விவசாயத்துக்குத் தேவையான மூலப் பொருட்களைப்பற்றியும் கவனிக்குமாறு மாநிலங்கள் முதலில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தன. நிலம் கிடைக்காத பகுதிகளில் கால்நடை வளர்ப்பு, கோழிப் பண்ணை, கிராமத் தொழில், மீன் வளர்ப்பு அல்லது பட்டுப்பூச்சி வளர்ப்பு போன்ற விவசாயமல்லாத சில தொழில்களில் இந்த ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டங்களுக்கு ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும், அடிமை ஊழிய முறை இருக்கும் பகுதிகளைக் கண்டுபிடிப்பதற்கு மாநிலங்கள் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்னும் சட்ட முறைகளின் வெளித் தோற்றத்திலுல் மறைக்கப்பட்டிருக்கும் எல்லா வகைக் கடன் அடிமை ஊழிய முறைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

இருபது அம்சத்தின் நான்காவது அம்சமான அடிமை விலங்கை ஒடிப்போம் என்று சூளுரைத்து, இன்று தமிழ்நாடு மிக வேகமாகச் செயலாற்றி வருகின்றது. அதன் விளைவாக நாடு நல்வாழ்வை நோக்கிப் பீடு நடை போட்டு வருகின்றது.!

ஜெய்—..

# ஆளுநர் சுற்றுப் பயணம் அளித்துள்ள நன்மைகள்



மேதகு தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் கோவை மாவட்டத்தில் பிப்ரவரி 24, 25 ஆகிய இரண்டு நாட்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். மக்கள் அவர் சென்ற வழியெங்கும் இருமருங்கிலும் கூடியிருந்து உற்சாகமான வரவேற்பளித்தனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமப் பகுதிகளிலுள்ள மக்கள் தங்களுடைய குறைகளைப் பற்றிய மனுக்களை ஆளுநரிடம் சமர்ப்பித்தனர். ஆளுநர் அவர்கள் மக்களுடைய குறைகளைப் போக்கும் வகையில் அரசாங்க அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆணை பிறப்பித்துள்ளார்.

பாண்டியார் புன்னப் புழா திட்டத்தை அமுல்படுத்தி உடனடியாக பாசன வசதிகள் செய்து தரும்படி சில மனுதாரர்கள் கேட்டிருந்தனர். அதற்கான திட்டங்கள் பரிசீலனையில் இருந்து வருவதாகவும், நீர்ப்பாசன வசதி செய்து தருவதற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் ஆளுநர் கூறினார்.

கிணறுகள் வெட்ட கடன் வாங்கியிருந்தவர்களில் சிலர் 80 அடியிலிருந்து 100 அடி ஆழம் வரைத் தோண்டியும், தண்ணீர் கிடைக்காமல் மிகவும் சங்கடத்திற்குள்ளாயிருப்பதாக நிறைய மனுதாரர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். அவர்களுடைய துயரம் தீரும் வகையில் ஆளுநர் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுடைய கடன்கள் ரத்து செய்யப்படுமென்று அறிவித்தார்.

கூலிவேலை செய்யும் விவசாயிகளது கூலி உயர்த்தப்படுமென்றும், இதற்கான திட்டங்களை விரைவில் செயல்படுத்தப் போவதாகவும், நில உரிமையாளர்கள் எக்காரணந்தொட்டும் ஏழைமக்களை ஏமாற்றும் பிழைப்பு இனி நடக்காதென்றும் அறிவித்தார்.

நிறைய மனுதாரர்கள் போக்குவரத்துக்கான நல்ல சாலைகள் அமைத்துத் தரும்படி விண்ணப்பித்திருந்தனர். அவர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப மதகு அமைப்பதும், ஜல்லி ரோடு போடுவதும், பின்னர் எல்லாப் பருவகாலத்திற்கும் ஏற்றதுமான சாலைகள் அமைப்பதும் படிப்படியாக நிறைவேற்றப்படுமென்றும் அறிவித்தார்.

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்திலுள்ள இன்னும் சில பகுதிகளும் பயன்படும் வகையில் பாசனவசதி செய்துதரப்பட வேண்டுமென்று சிலர் விண்ணப்பம் செய்திருந்தனர்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் ஆளுநர் அந்தத்திட்டம் பரிசீலனை செய்யப்படுவதோடு மட்டுமல்லாது, அது ஏற்றுக் கொள்ளப்படும் நிலையிலும் இருக்கின்றது என்று அறிவித்தார். மற்றும் மலையடிவாரங்களிலுள்ள வறட்சியான பகுதிகளில் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படும் மக்களுக்கு குளம் வெட்டி தண்ணீர் பெறும் திட்டத்தைக் கைவிட்டு, ஆழமானக் குழாய்க் கிணறு அமைத்து வேண்டிய அளவு தண்ணீர் கிடைப்பதற்கு உதவும் திட்டங்களே நிரந்தர திட்டங்களாக அமையுமென்றும், மேலும் அந்தமாதிரித் திட்டங்கள் குடிநீர்ப் பஞ்சத்தை நிரந்தரமாக போக்குவதோடல்லாமல், எதிர்காலத்தில் மக்களுக்கு நிலையான சொத்துக்களாக அமைந்திடுமென்றும், மக்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் அறிவுரை தந்துள்ளார்கள். அதன்படி குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கானத் திட்டங்கள் உடனடியாக மேற்கொள்வதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பாசன வசதிகளுக்குக்கூட ஆழமான குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டங்கள் உபயோகமானதாயிருக்குமென்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசாங்க அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

விவசாயிகள் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது வேறு கூட்டுறவுத் துறைகள் மூலம் கடன் வாங்கியிருந்தாலோ அவர்கள் திருப்பித்தர வேண்டிய கால அளவு நீடிக்கப்படும். இதுபோக தனியாரிடம் வாங்கிய கடன்களையும் ஒத்தி வைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

தனியார் துறையில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் ஆளுநர் அவர்களை அணுகி தங்களை வேலைநீக்கம் செய்துவிட்டதாகவும், ஆதலால் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். அதற்

கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்வதற்கான வழி வகைகள் செய்யப்படுமென்று ஆளுநர் அறிவித்தார்.

தமிழாசிரியர் பயிற்சி பெற்று வேலை கிடைக்காமலிருப்பவர்கள் சிலர், ஆளுநரிடம் வேலை தரும் படி மனுச் செய்திருந்தனர். இம் மாதிரியான நிலை எதிர்காலத்தில் உருவாகாத வகையில் கல்வித் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, வேலைவாய்ப்பு அளிக்கும் சக்தியை அனுசரித்தே தமிழ்க் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்படுமென்றும், படித்துப் பட்டம் பெற்றவர்கள் நிச்சயமாக வேலைவாய்ப்பு பெறுவதற்கான திட்டங்கள் உருவாக்கப்படுமென்றும் அறிவித்தார்.

சிறுதொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கான வழிமுறைகளை அரசாங்கமே ஆராயுமென்றும், அம்மாதிரி திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் தொழில் நுட்பக் கல்வியில் தேர்ச்சி பெற்று வேலையில்லாத மாணவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்க வழி ஏற்படும் என்றும் அவர் கூறினர்.

கண்பார்வையற்ற சிறுவர்கள் சிலர் ஆளுநரை அணுகி ஏதாவது தொழிற்கல்வி கற்றுத்தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர்களுக்கு உதவித் தொகை கொடுத்து உடனடியாக கண் பார்வையற்றவர்கள் பள்ளியில் சேர்த்துக்கொள்வதற்கான ஆணையையும் பிறப்பித்தார். பள்ளியிலேயே அந்தச் சிறுவர்களுக்கு உணவு, உடை உறைவிடம் அளித்து தொழிற்கல்வி ஒன்றையும் அவர்களுக்குப் புகட்ட வேண்டுமென்று கட்டளை பிறப்பித்துள்ளார்.

மற்றும் சில முதியோர்கள் ஆளுநரை அணுகி, ஆதரவற்ற தங்களுக்கு பண உதவி அளிக்கும் படி கேட்டுக் கொண்டனர். அவர்களுக்குத் தலா ரூ. 25 வீதம் ஆளுநர் கொடுத்தார். அதோடு நில்லாமல், இனி மாதாமாதம் அவர்களுக்கு முதியோர் ஊதியம் தரப்படுமென்றும் அறிவித்தார்.

வெள்ளகோயில் கிராமத்தில் ஆளுநருக்கு மாலை அணிவதற்குப் பதிலாக மாலைகளுக்கு ஆகும் செலவை நிதியாகத் திரட்டி ஆளுநரிடம் அளித்தனர். அந்தப் பணத்தை கண் பார்வையற்ற சிறுவர்களுக்குக் கொடுத்தார். அங்குள்ள மக்கள் ரூ. 450 வசூல் செய்து ஆளுநரிடம் அளித்தனர். அந்தப் பணத்தை உடல் ஊனமுற்ற இரண்டு சிறுவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் தொழிற்கல்வி பயிலுவதற்கான ஏற்பாடுகளையும் ஆளுநர் செய்துள்ளார்.

நிர்வாகத்தில் லஞ்ச ஊழல்கள் பூண்டோடு கிள்ளியெறியப்படுமென்றும், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதென்றும் ஆளுநர் அறிவித்தார்.

அரசு ஊழியர்கள் பணியாற்றுவதில் இனி எந்தவிதமான குறுக்கீடும் இருக்காதென்றும், ஆகவே அவர்கள் பணியாற்றுவதில் இனி கால தாமதமாகாதென்றும் ஆளுநர் அறிவித்தார். பத்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் நிலவியிருந்த மலர்ச்சி, இனி திரும்பவும் கொண்டு வரப்படுமென்றும், மக்களுடைய துயர் துடைப்புப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படுவதற்கு ஆவன செய்யப்படுமென்றும் ஆளுநர் உறுதியளித்தார்.

மக்கள் முகத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற மகிழ்ச்சியும், அவர்களுடைய குதூகலமும் இதற்கு முன்பு அவர்கள் முகத்தில் இருந்ததில்லையென்றும், குடியரசுத் தலைவர் ஆட்சியே இந்த மகிழ்ச்சிக்குக் காரணம் என்றும், இதற்குப் பொது மக்கள் தனக்கு அளிக்கின்ற உற்சாக



வரவேற்பொன்றே சாட்சியாகும் என்றும் ஆளுநர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த சிறப்புப் பேட்டி யொன்றில் கூறிப்பிட்டார்.

வறட்சி நிவாரணத்திற்காக இதுவரையில் முந்திய அரசு செலவிட்டதையும், மத்திய அரசு கொடுத்த வறட்சி நிவாரண நிதி முறையாக செலவிடப் பட்டதா என்பதையும் இனி ஆராயப்பட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் ஆளுநர் அறிவித்தார்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலைகுறைப்பு, நிலமற்றோர்க்கு வீட்டுமனைவழங்கிடும் திட்டம், கிராமப்புறங்களில் கடன் அடைப்பு மற்றும் கடன் ஒத்தி வைப்புத் திட்டங்கள், விவசாயிகளுக்கு கூலி உயர்த்தித் தரும் திட்டங்கள், குடிநீர் மற்றும் பாசன வசதி செய்துதரும் திட்டங்கள், அதிக வேலைவாய்ப்பினை அளித்திடும் திட்டங்கள்-அனைத்துமே பிரதமருடைய 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் சில அம்சங்களாகுமென்று ஆளுநர் அறிவித்தார்.

